20 காசு

காஞ்சி

1-5-69

நிறுவனர்: அண்ணாதுரை

5.43.

அரிஜனங்கள், என்றென்றும், அரிஜனங்களாகவே இருக்க வேண்டும்; தீண்டாமை என்பது இறைவன் கட்டளை; இந்துமதத்தின் தர்மமும் அதுதான் என்று பொருள்படும்படியாக அண்மையில் பேசிவிட்டு, அவர் பேசிய கருத்துக்களை இன்று துணைக்கண்டத்துக்கே ஒரு கேள்விக் குறியாகவும் விட்டு வைத்துவிட்டு, கனகுஷியாக உலா வந்து கொண்டிருக்கும் பூரிசங்கராச்சாரியார் இப்போது முன்பு சொன்னதைத் தொடர்ந்து புதியதொரு கருத்தையும் சொல்லியிருக்கிருர். சொன்னதையும்சொல்லிவிட்டுகூட ‘அரசாங்கத்திடமிருந்தோ,அல்லது மற்றவர்களிடமிருந்தோவருகிறஎந்த எதிர்ப்பினையும் சந்திக்கத் தான் தயார்’’ என்றும் கூறிவிட்டிருக்கிருர், தான் ‘ஜகத்குரு’வாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறவரையில் சனுதன தர்மம் பற்றி, தன் சிஷ்யகோடிகளுக்குப் போதிப்பதும், சனுதன தர்மத்தைக் கட்டிக்காப்பதும் தன்கடமை, என்று விளக்கமும் தந்திருக்கிருர். இந்த தர்மத்தைக் கடைப்பிடிப்பது இந்துக்கள் ஒவ்வொருவருடைய பிறப்புரிமை என்றுவேறு தெளிவுபடுத்திவிட்டு ‘இந்து சனுதன தர்மம்’ பற்றி பள்ளிகளிலும், கல்லூரிகளிலும்கூட போதிக்கப்பட வேண்டும் என்றும் கருத்தறிவித்திருக்கிருர், ஜகதல் பூரிலிருந்து. இவையெல்லாவற்றுக்கும் காரணம், அவரை இன்னமும் வெளியே உலவவிட்டு வைத்திருப்பதுதான் அல்லவா!

* * *

‘‘மத்திய–மாநில உறவு’’—என்ற குரல் வெளிப்படும்போதே ‘‘ஐயோ! மத்திய அரசுக்கு ஆபத்து’’ என்று கூக்குரல் கிளப்பிக்கொண்டுவருவது காங்கிரசுக்காரர்களின், காங்கிரஸ் அமைச்சர்களின் வாடிக்கையாக இருந்து வந்திருக்கிறது. ஆனுல் சில நாட்கள் முன்னதாக மாநிலங்களவையிலேயே, உள்துறை அமைச்சர் சவாண் அவர்கள், ‘‘மத்திய–மாநிலஉறவு’’கள் குறித்து ஆராய நிபுணர் குழு அமைக்கத் தமிழகமும், மேற்கு வங்காளமும் முன் வந்திருப்பதனை வரவேற்றுக் கருத்தறிவித்திருக்கிருர். ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள, இந்த உறவுதொடர்பான நிர்வாகசீர்திருத்தக் குழுவின் கருத்துக்களுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் விடையிறுத்திருக்கிருர். மெள்ள மெள்ள நம் பக்கம் மத்திய அரசின் ‘காது’ வந்துகொண்டிருக்கிறது என்பதுதானே இதன் பொருள்!

* * *

கேட்டீரா! சேதி!

விவசாயத்துக்குப் பெரிதும் பயன்படும் உரத்துக்கு விதித்த புதிய வரியை ரத்துச்செய்ய முடியாது! என்று கடைசியாகப் பதில் கூறிவிட்டார் துணைப்பிரதமரும், நிதி அமைச்சரும், வரிப்புலியுமாகிய மொரார்ஜிதேசாய். திட்டங்களுக்கு முதலீடுசெய்ய நிறைய பணம் தேவைப்படுகிறது; எனவே இந்த வரியை நீக்கமுடியாது என்ற அவர் பதிலிலிருந்து நாம் புரிந்துகொள்ள முடிவது, விவசாயத்தொழில் கெட்டொழிந்தாலும் கெடட்டும்; உணவுப்பொருளின்றி மக்கள் செத்தொழிந்தாலும் ஒழியட்டும்–தீட்டிச் செயல்படுகின்ற திட்டங்கள் மூலம் பலன் கிட்டாமல் போனுலும் போகட்டும்! திட்டத்துக்காகப் பணத்தைக்குவித்தே தீரவேண்டும்! பணத்துக்காக வரியைப் போட்டேயாகவேண்டும்! என்ற ரீதியில் செயல்படத் தொடங்கிவிட்டார்! என்பதும் வருங்காலத்திலும் பயங்கர வரியினை அவர் விதிக்க இருக்கிருர் என்பதும்தான்! மறுப்பதென்ருல் அவரேதான் வரவேண்டும்! அவராவது மறுக்கப்போவதாவது!

* * *

எந்தவொரு அதிசயமும் இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து விளைந்து அது உலகுக்குப் பரவுமானுல் அப்போது அதன் மகத்துவமே மகத்துவம்! எத்தனையோ அதிசயங்களுக்கு விளைநிலமாகிக் கொண்டிருக்கும் இந்திய பூபாகம், இப்போது பூரிசாமியார் விஷயத்திலும் ஒரு அதிசயத்தைத் தோற்றுவித்திருக்கிறது. பூரியார்மீது வழக்கு ஒன்று நடைபெறுகிறது — அவர் சட்டவிரோதமாகப் பேசிவிட்டதாக! அவருக்கு ஆதரவாக வழக்கு மன்றத்திற்கு வந்து வாதாட இதோ நாங்கள் இருக்கிறேம் என்று 40 - வழக்கறிஞர்கள் தெரிவித்திருக்கிருர்களாம்! என்ன, இது உங்களுக்கு அதிசயமாகத் தெரியவில்லையா!

* * *

‘சர்வாதிகாரி’ என்ற சொல்லே பல பேருக்கு வேப்பங் காயாக இருக்கும்! வேப்பங்காய் கனியும் போது, கொஞ்சம் இனிப்புக்கூட இருக்கும் என்பார்கள். அது உண்மைதான் என்பதுபோல, ஒரு சர்வாதிகாரியினுல்கூட சில வேளைகளில் நல்ல காரியங்களைச் செய்ய முடியும் என்பதற்கு ஒரு சான்று கிடைத்திருக்கிறது பாகிஸ்தானிலிருந்து. மற்றவர்கள்மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் வருகிறபோது அது தொடர்பாக, அந்த நபர் பற்றி விசாரிக்க—சொத்துக்களைக் கணக்கெடுக்க குழு நியமிப்பது என்பது தான் எங்கும் உள்ள வாடிக்கை! (இந்தியா மட்டும் அதற்கு விதிவிலக்கு!) ஆனுல் பாக். சர்வாதிகாரியாகிவிட்ட யாயாகான், தனக்கிருக்கும் சொத்துக்களின் மதிப்பு எவ்வளவு என்பதை நாட்டுக் கறிவிக்க, அவரே ஒரு குழுவை நியமித்திருக்கிருர்! நல்லதொரு நடைமுறையில்லையா இது!

* * *

தேசியகீதம் என்பது மதிக்கப்படவேண்டியதுதான். ஆனுல் சில வேளைகளில் பூரி சாமியார் போன்றவர்களால் மதிக்கப்படாமலும் போய்விட நேரிடுகிறது. அதுபோன்ற நிலையேதும் இனியேற்படாமலிருக்க ஒரு சட்டம் கொண்டுவரப்போகிருர்களாம்! நாடாளுமன்றத்தில்! ஏற்கெனவே ஒருசட்டம் கொண்டுவந்திருக்கிருர்கள், இதுபோன்ற அவமதிப்புக்கள் ஏற்பட்டால் தண்டிக்க! தேசியகீதத்துக்கு என்று இப்போது ஒரு தனிச்சட்டம்! தேசியக்கொடிக்கென்று ஒரு சட்டம்! தேசீய மொழிக்கு என்று ஒன்று! இப்படியே ஒவ்வொன்றுக்கும் ஒன்று என்ருல். நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கான ‘பைல்’ அறை இடம் பிடிக்குமா? என்று கேட்டுவிடக்கூடாது!

* * *

அடுத்த ஆண்டு பேரறிஞர் அண்ணு அவர்கள் மறைவு நாளான பிப். 3ல் மாமேதையின் திருஉருவைத் தாங்கிய அஞ்சல் தலை வெளியிட மத்திய அரசு ஒப்புக்கொண்டுவிட்டிருக்கிறது. மகிழ்ச்சிகரமான தித்திக்கும் சேதி இது! இதோடு முன்பு திருவள்ளுவருக்கு நினைவுத் தபால்தலை வெளியிட்டதனைப்போல் திருவள்ளுவர் [illegible]ருவம் பதித்த தலையை நிரந்தர தலையாக வைத்திருப்பது பற்றி [illegible]ரேனும் குரல் கொடுத்தால் நல்லது! காலமெல்லாம் நல்ல பயனை [illegible]க்கதாயிருக்கும்!

* * *

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 5 | 11—5—69 | இதழ் 43

அனைத்துக்குமே இழப்புதான்!

இந்தியத் துணைக்கண்டம் இத்துணைச் சீக்கிரம், இன்னுமொரு துக்கச் செய்தியைக் கேட்டு, மீளாத் துயருக்குள் வீழ்ந்து வேதனைப் படவேண்டிய அவலம் ஏற்படும் என்று எவருமே எண்ணியிருக்க முடியாது.

தமிழகத்தின் தவப்புதல்வராகவும், இந்தியத் துணைக்கண்டத்துக்கே சிந்தனையாளராகவும், உலகத்துக்கே ஒரு ஜனநாயகத் திருவுருவாகவும் திகழ்ந்துவந்த பேரறிஞர் அண்ணா அவர்களது இழப்பின் விளைவை அனுபவித்துக்கொண்டு வருகிற அதே வேளையிலேயே, இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜகீர்உசேன் அவர்களது மறைவு குறித்தும் பேரதிர்ச்சியுற வேண்டிய நிலை நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

பேரறிஞர் அவர்களை இழந்து சரியாக மூன்று திங்கள் கழித்து அதே தேதியில், மே 3-ம் நாள் அன்று குடியரசுத் தலைவரின் இழப்புச் செய்தி கிடைத்திருக்கிறது.

காலதேவனுக்கு இந்தியத் துணைக்கண்டம் அப்படி என்ன கொடுமை இழைத்துவிட்டது என்பதே புரியவில்லை. நல்ல மனிதர்கள், சிந்தனையாளர்கள் — தத்துவவாதிகள் என்பவர்களையெல்லாம் அங்கே அழைத்துக்கொண்டுவிட்டபின்னர் இந்த நாட்டில் எப்படிப்பட்டவர்கள் எஞ்சி இருப்பார்கள்? இவர் போன்றவர்களையெல்லாம் அழைத்துக்கொள்ளும் அளவுக்குக் காலதேவன் வாழும் உலகம், அறிவுச் சூன்யமாகவா இருக்கிறது? அறிவுச் சூன்யத்தின் எதிரொலிதானோ இப்படிப்பட்ட சம்பவங்கள்? என்றெல்லாம் எண்ணிப்பார்க்கச் செய்கின்றது மனம். கூடவே, மரணம் தவிர்க்கப்பட முடியாதது என்பதும் நினைவுக்கு வந்துவிடுகிறது.

டாக்டர் ஜகீர்உசேன் அவர்களது இழப்புக் குறித்து உலகப் பெருந்தலைவர்கள் எல்லாம் இரங்கற்செய்தி விடுத்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் இருந்து டாக்டர் அவர்களை எடுத்துக்காட்ட முயன்றிருக்கிறார்கள். என்றாலும் எந்தவொருவராலும் குடியரசுத் தலைவர் அவர்களை முழுமையாகப் புலப்படுத்திக் காட்டிவிட்டதாக நம்ப முடியவில்லை.

டாக்டர் ஜகீர் உசேன் அவர்கள் பி. ஏ ஹானர்ஸ் பட்டம் பெற்று எம். ஏ. ஆனவர் என்றும், பின்னால் பி. எச். டி. பட்டம் பெற்றார் என்றும் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக்காட்டி இருக்கிறார்கள்.

ஆண்டொன்றுக்கு ஆயிரக்கணக்கான —நாடெங்குமாகப் பல்லாயிரக்கணக்கான பேர் பட்டதாரிகளாகிக்கொண்டுதான் இருக்கிறார்கள், என்றாலும் அவர்களில் ஒரு சிலர் தான் கற்பவை, கசடறக் கற்று, கற்றபின் அதற்குத் தக நின்று, மாற்றார்க்கும் மதி வழங்கும் மாமேதைகளாய், வழி காட்டிகளாய், இயங்குகின்ற கற்றறிவாளர்களாய்ப் பரிணமிக்கிறார்கள். கற்றறிவாளர்கள் என்று தொகுத்துக் காட்டிவிட முடியும் அளவுக்குக் குறைந்த எண்ணிக்கையுள்ளவர்களில் மறைந்த குடியரசுத் தலைவர் அவர்கள் முதன்மையானவர்கள் என்று கூறுவது மிகையுடையதாகி விடாது.

டாக்டர் ஜகீர் உசேன் அவர்களுடைய வாழ்க்கைத் தொடக்கமே ஆசிரியப் பணி என்கிறபோது, நாட்டு மக்களுக்கு எத்தகைய அறிவுப் பணியாற்றி வந்திருக்கிறார் என்பதை ஓர்ந்தறிய முடியும். இந்த அறிவுப் பணியை, காந்தியார் காலம் தொடங்கி, இந்திராகாந்தியார் காலம் வரையில் இடையறாது நிறைவேற்றி வந்திருக்கிறார் என்பது, அவரது பெருமையை, மேலும் பெருமையுடையதாக்குவதாகவே ஆகும். எனவே, குடியரசுத் தலைவர் அவர்களுடைய பேரிழப்பு, நாட்டின் அறிவுத் துறைக்கே ஏற்பட்ட மிகப் பெரிய இழப்பாகும்.

டாக்டர் ஜகீர் உசேன் அவர்களுடன் நெருங்கிப் பழகி, இயல்பினையும் பண்பாட்டினையும் அறிந்தவர்கள், துணைக் கண்டத்தின் தூயதொரு பண்பாட்டுக்கே பேரிழப்பு என்று கூறுவார்கள். சிறந்த சிந்தனையாளராகவும், மாற்றாரையும் மதிக்கின்ற சிறந்த ஜனநாயக வாதியாகவும் அவரைக் கண்டவர்கள் ஏராளம், ஏராளம்.

'நெருநல் உளனொருவன் இன்றில்லையென்னும் பெருமை படைத்ததிவ் வுலகு' என்றுரைக்கும் தமிழ் மறைக்கு ஒரு இலக்கியமாக காலை 11. மணி வரையில் உற்றார் உறவினர்களுடன் உரையாடினார்; நூலகம் சென்று படித்துக் கொண்டிருந்தார்; நீராடி வருவதாகச் சென்றார் என்றெல்லாம் செய்தியைப் படித்துவிட்டு 11. 25 க்கு காலன் வாய்ப்பட்டுவிட்டார் என்ற செய்தியையும் இணைத்துப் படிக்கிறபோது—நல்ல நம்பிக்கைகளின் மேல்கூட ஐயம் ஏற்பட்டுவிடுவது இயல்பு என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டுதான் குடியரசுத் தலைவரின் மரணச் செய்தி.

(14-ம் பக்கம் பார்க்க)

தம்பி

பேரகராதி

"திருநெல்வேலியில் பருவமழை தவறியிருக்கிறது; விவசாயிகள் பரிதாப நிலையில் இருக்கிருர்கள். சங்கரன்கோயில் தாலுகாவில், சிவகிரி பகுதியில், நாங்குனேரியில் பெரும்பகுதி வரட்சி ஏற்பட்டிருக்கிறது. இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்ட மக்கள் ஏராளமானபேர் திருநெல்வேலி இராமநாதபுரம் ஜில்லாக்களில் கஷ்ட நிலையில் இருக்கிருர்கள்" என்று செல்வராஜ் எனும் காங்கிரஸ் எம். எல். ஏ. இப்போது நடைபெற்ற சட்டசபைக் கூட்டத்தில் எடுத்துரைத்தார்.

பொதுத்தேர்தல் நெருங்குகிறது. பொதுமக்களை மீண்டும் கண்டு, 'ஐயா! அப்பா!' என்று ஓட்டு கேட்கவேண்டுமே "ஆமய்யா M. L. A., அங்கே போய் முன்பு அமர்ந்திருந்தீரே, என்ன சாதித்துவிட்டீர்?" என்று யாராவது கேட்டுவிட்டால், "நமது மக்கள் ஆலாய்ப் பறக்கிருர்கள். ஆட்சியாளர்கள் தக்க பரிகாரம் தேட வேண்டும் என்று அடித்துப் பேசினேன் அன்பரே! இடித்துரைத்தேன் நண்பரே! இதோ "இந்து" பார்த்திடுக! இதோ "மித்திரன்" படித்திடுக! —என்று எடுத்துக்காட்டி இளித்து நிற்க இது உதவட்டும்என்பதற்காகவே இந்த M. L. A. இவ்விதம் சட்டசபையில் பேசினுர் என்று ஏளனம் செய்யாதே, தம்பி! காரணம் எதுவாகவேனும் இருக்கட்டும், காங்கிரசாட்சியின் 'கோணலை' ஒரு காங்கிரஸ் பிரமுகர் எடுத்துக் கூறுகிருர் — எனவே இந்த ஆட்சியின் அவலட்சணத்தை நாம் வேண்டுமென்றே (நன்றி மறந்து!) கண்டிக்கிருேமென்று குற்றம் சுமத்துபவர்களின் வாய்க்கு ஆப்பாகவாவது இது பயன்படுமல்லவா? அந்தத் திருப்தி எனக்கு.

திருநெல்வேலிச் சீமையே வளம் குன்றித் திண்டாடுகிறது — தேயிலைக் காட்டிலே பாடுபட்டு எலும்புந்தோலுமாகி, அந்தப் பிழைப்பின் வாயிலும் மண் விழுந்ததால் அவதிப்பட்ட மக்கள் வேறு, வாழ வழி கேட்டுக்கொண்டு வரட்சியால் வாட்டப்படும் நெல்லைச் சீமைக்கு வந்துள்ளனர்.

ஆட்சியாளர்கள் இந்த அவதி துடைத்திடுவோம் என்று உறுதியளிக்கக்காணேம் —அதற்கான திட்டம் தீட்டுவதாகவும் தெரியவில்லை — அப்படி ஒரு பிரச்சினை இருப்பதை அவர்கள் ஒப்புக்கொள்வதாகவும் தெரியக்காணேம்.

கோயமுத்தூர் ஜில்லாவில் மாத்திரம் 12 ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் கிடையாது என்று வி. கே. பழனிச்சாமிக் கவுண்டர் எனும் காங்கிரஸ் M. L. A. அதே சட்டசபையில் கூறுகிருர்.

கோவை மாவட்டம் காங்கிரசுக்குத் தேர்தல் செலவுக்குத் தயாராக இருக்கும் பணப்பெட்டி, தொழிலதிபர்களின் கோட்டம், இங்கு டாக்டரில்லா ஆஸ்பத்திரிகள்! இந்த வெட்கக்கேட்டை எடுத்துக்கூறத் துணிவு காங்கிரஸ் M. L. A.க்கு ஏற்பட்டது கண்டு எனக்கு ஒருவகையில் மகிழ்ச்சி.

பஞ்சமும் நோயும் நின்மெய்யடியார்க்கோ? என்று பாரதியார் பாடினுர், ஆமாம், ஆமாம் என்று காங்கிரசாட்சி அறைகின்றது.

பஞ்சம் ஒருபுறமும், பதைத்தோடி வந்து பிழைக்க வழி கேட்கும் 'பராரிகள்' மற்ருேர்புறம், நோய்நொடி நெளிவது வேருேர்புறம், என்று இப்படி நிலைமை இருக்கும்போது, மகிழ்ச்சியா பொங்கும்? என்று கேட்கத் தோன்றும், தம்பி! மகிழ்ச்சி பொங்குமா? பொங்காது! ஆனுல் வேருென்று பொங்கி வழிகிறது!! என்ன என்கிருயா? இதோ கேள், மற்ருேர் காங்கிரஸ் எம்.எல்.ஏ. பேசுவதை.

''வீட்டுக்கு வீடு கள்ளச்சாராயம் காய்ச்சும் தொழில் விமரிசையாக நடந்து வருகிறது! சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளாவிடில் காங்கிரஸ் ஸ்தாபனத்துக்குக் கெட்டபெயர் வந்துவிடும்'' என்று காங்கிரஸ் எம். எல். ஏ. மாரிமுத்து என்பவர் பேசுகிருர்.

சர்க்கார் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லையோ, என்ருல் இது சம்பந்தமாக எடுக்கவில்லையே தவிர, வேறு 'அதிமுக்கியமான' ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறது; 'கோடையிலே இளைப்பாறிக்கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவாய்' விளங்கும் உதகமண்டலத்தில், ஒரு மகாராஜாவின் அரண்மனையைப் பல இலட்ச ரூபாய் விலை கொடுத்து வாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது!

வெள்ளையாட்சிக் காலத்தில், கோடையின்போது, ஊட்டி' செல்வர், இங்கு மேடையில் 'கோடை இடி'; யெனக் காங்கிரசார் முழக்கமிடுவர், 'கேளுங்கள் தேச மகா ஜனங்களே! இங்கு கொளுத்தும் வெய்யிலில், கால் கொப்பளிக்கும் நிலையில், கை புண்ணுகும் நிலையில், கண் பூத்துப்போகும் நிலையில், நாம பாடுபடுகிருேம், மண்டை பிளந்துபோகிறது இங்கு; நமது வரிப் பணத்தைக் கொள்ளையடிக்கும் கொலைகாரக் கும்பல், கோடை தாக்காதிருக்க, ஊட்டிக்குப் போயிருக்கிருர்கள், உல்லாசமாகக் காலங்கழிக்க!! இதுவா தர்ம ராஜ்யம்? இதுவா இராம ராஜ்யம்!!—என்று வெளுத்து வாங்கினுர்கள்,

கோடை இடிகள் கோலோச்சுவோராகிவிட்டனர். இப்போது ஊட்டியில் ஆரன்மூர் அரண்மனையை வாங்க ஏற்பாடாகி வருகிறது.

''ஊட்டியில் இந்த ஏற்பாடு நடைபெறுகிறது என்கிறீரே, ஊட்டியில் மதுவிலக்குச் சட்டம் தளர்த்தப்படுகிறதாமே, உண்மையா?'' என்று தெய்வசிகாமணி எம். எல். ஏ. கேட்கிருர், அமைச்சர் கூறுகிருர், ''இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை'' என்று.

இப்படியாகத்தானே காங்கிரஸ் இராஜ்யபாரம், நடைபெற்றுக்கொண்டு வருகிறது; இந்தவிதமான ஆட்சியை 'கேள்வி கேட்பாரற்ற'' முறையிலே விட்டுவிடக்கூடாது, அடுத்த தேர்தலில் கடும் போட்டி இருக்கவேண்டும். ஜனநாயகத்துக்கு அப்போதுதான் சிறிதளவாவது வாய்ப்பு ஏற்படும் என்ற நோக்குடன், நமது கழகம் தேர்தலில் போட்டியிடத் திட்டமிட்டாலோ, 'எமது கண்ணுக்குக் கண்ணுக உள்ளவர் காமராஜர்; அவருக்கா எதிர்ப்பு? அடபாவிகளா! நீங்கள் நாசமாய்ப்போக!! கருவேப்பிலைக்' கொத்துப் போல அவர் கிடைத்திருக்கிருர்!! அவருக்கு 'உலை' வைக்கலாமா?'' என்று கேட்கின்றனர்.

திராவிடநாடு பிரிவினையை ஒப்புக்கொள்பவன் நண்பன்; இல்லை என்பவன் எதிரி! இதுதான் இனி ஒரே பிரச்சினை — என்ற பேச்சு 'பழங்கதை'யாகிவிட்டது, இப்போது உள்ள ஒரே பிரச்சினை, உயிர்ப் பிரச்சினை, காமராஜர் மீண்டும் முதலமைச்சராக வேண்டும், அதை இந்தக் கண்ணுரக் காணவேண்டும் என்று கூறுகின்றனர்.

பஞ்சம் பட்டினி போக்காவிட்டாலும், சொந்த நாட்டான் பிச்சை எடுப்பதைக் கண்டு ஒரு சொட்டுக் கண்ணீர் விடாவிட்டாலும், சோற்றுக்கில்லாதானே! செத்துத் தொலை! என்று இலங்கையில் உள்ள சர்க்கார் தமிழனைச் சுட்டுத்தள்ளக் கண்டும் துளி பதருவிட்டாலும், கள்ளச்சாராயம் பொங்குவதையும் கள்ளமார்க்கட் பெருகுவதையும் கண்டும் காணுதது போலிருந்துவிட்டாலும், மீண்டும் காமராஜர் ஆட்சிதான் வர வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி கருதக் கடமைப்பட்டிருக்கிறது.

'காங்கிரஸ் கட்சியானது இந்துமதக் கோவில்களிலுள்ள மண்டபங்களைப்போலிருக்கிறது. உள்ளே புகுந்தால் ஒரே இருள். வௌவால் புழுக்கை துர்நாற்றம். அண்ணுந்து பார்த்தால் வௌவால்கள் தொங்கிக்கொண்டிருப்பதைத் தவிர வேறெந்தக் கலையையும் காண முடிவதில்லை. கோயில் மண்டபம் என்ற பக்திக்காக அதன்துர்நாற்றத்தை வெளியில் கூற வெட்கப்படுகின்ற பக்தர்போல இன்றுஞ் சிலர் அந்தக் காலத்துக் காங்கிரஸ் ஆச்சே அதைக் குறை கூறலாமா? என்று கருதிக்கொண்டு மூக்கைப் பிடித்துக்கொண்டு அந்த இருட்டு மண்டபத்திற்குள் இன்னமும் நடமாடிக்கொண்டிருக்கின்றனர்.

திருட்டுக்கும் கொலைக்கும் தவிர ஆயிரக்கால் மண்டபம் வேறு ஏதேனும் நல்ல காரியத்துக்குப் பயன்படுகிறதா? காங்கிரஸ் கட்சியின் நிலையும் அதேதான். அந்த மண்டபத்துக்குள்ளிருந்து வருகிறவர்களைக் கண்டாலுமே யோக்கியர் சந்தேகப்படாமலிருக்கமாட்டார்கள்''

இது, தம்பி, பெரியார் கருத்து; விடுதலை மூலம் நாட்டுக்கு அளிக்கப்பட்டது.

காமராஜர், அந்த மண்டபத்தில்தான் கொலுவீற்றிருக்கிருர்!!

பக்தர்கள்தான், வௌவால் புழுக்கையின் துர்நாற்றத்தையும் சகித்துக்கொண்டு, அந்த நாள் மண்டபம் என்று பாராட்டுகிருர்கள்; நமக்குமா அதே நிலைமை?

பக்தர்களேகூட, நாற்றம் அதிகமாகிவிட்டால், பதை பதைக்கிருர்கள்—மண்டபத்தைச் சுத்தம் செய்தாக வேண்டும் என்று கூக்குரலிடுகிருர்கள்.

எல்லை குறைகிறதென்ருல் 'விடமாட்டேன்'' என்று வங்கம் சீறுகிறது, பம்பாய் உங்களுக்கில்லை என்ருல், மராட்டியர் 'பார்க்கிருேம் ஒரு கை'' என்கிருர்கள், குஜராத் தனி மாகாணமாக அமையாது என்ருல், மந்திரியின் வீடு புகுந்து தாக்குகிருர்கள் குஜராத்திகள்.

இங்கு தேவிகுளம் பீர்மேடு, நெய்யாற்றங்கரை கொச்சின் சித்தூர், செங்கோட்டையில் ஒரு பகுதி, பறிபோயிற்று! வந்தேமாதரம்—என்று வாளா இருந்துவிடச் சொல்லிவிட்டார் காமராஜர்,

யாராவது வாய் திறந்தாலோ, அவர்கூட, நியாயந்தானே, உரிமை பறிபோனதால் மனம் குமுறுகிருர்கள் என்று கூறுவார் போலிருக்கிறது; மற்றவர்களல்லவா. ''காமராஜர்மீது எதிர்ப்பு எழலாகாது'' என்கிருர்கள்,

ஆந்திர தமிழக எல்லைத் தொல்லைக்கு இன்றுவரை பரிகாரம் காணோம். என்றாலும் கடை அடைப்புச் செய்து கண்டனத்தை காட்டினால், காலித்தனம் என்று கூறவும், மனம் இடம் தருகிறது!!

"காங்கிரசை இப்போது மட்டும், கடையனே! ஆதரிக்கவா செய்கிறோம். அது, ஐயா சொன்னது போல, வௌவால் புழுக்கை துர்நாற்றமடிக்கிற பாழ் மண்டபந்தான். எங்களுக்கு அந்த மண்டபத்தின்மீது வெறுப்புத்தான், எப்போதும்போல; ஆனால், காமராஜர் நல்லவர், இன உணர்ச்சி உள்ளவர், ஏதோ நாம் எண்ணுகிறபடி, சொல்லுகிறபடி, நல்ல காரியங்கள் செய்து வருகிறார். எனவேதான். மீண்டும் அவர் வர வேண்டும் என்று ஆதரிக்கிறோம்; இதுபுரியவில்லையா?" என்று கேட்டுக் கெக்கலி செய்யும் தோழர்கள் இருக்கிறார்கள். தம்பி! காமராஜர், தமது இன உணர்ச்சியை எந்தவகையில் காட்டிக்கொண்டு வருகிறார் என்று கூடக் கேட்கவேண்டாம் — பொதுஜன நன்மையை உத்தேசித்து அதற்குப் பதில் அளிக்கக்கூடாது என்று கருதிக் கொண்டிருக்கக்கூடும்—வாதத்துக்காக ஒப்புக் கொள்வோம், இன உணர்ச்சி கொண்டவர் 'என்பதை; ஆனால் காங்கிரஸ் தலைவரோ, முதலமைச்சரோ, இன உணர்ச்சி கொண்டவராக, அதன்படி நடந்துகொள்பவராக இருந்துவிட்டால், அந்தக் காரணத்துக்காக, காங்கிரசை எதிர்க்காதிருக்கலாமா? என்பது பற்றி எண்ணிப் பார்த்திட வேண்டுமல்லவா?

இதற்கும் எனக்குத் துணை 'பெரியாரின் பேரகராதி, தான்.

> இன உணர்ச்சியில் ஓமந்தூர் ரெட்டியாரவர்கட்கு இணையான நீதிக்கட்சித் தலைவர் ஒருவர்கூட இல்லையென்று நாம் வெட்கமின்றி ஒப்புக் கொள்ளவும் தயாராயிருக்கிறோம்.
>
> பழைய ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களை விட அதிகமான இன உணர்ச்சி கொண்ட காங்கிரஸ் தலைவர்கள் பலர் இருக்கின்றனர் என்பது பற்றி நாம் பெருமைப்படுகிறோம்.
>
> ஆயினும் காங்கிரஸ் ஒழிப்பு நாள் கொண்டாடுவதன் நோக்கம் என்ன?

1. காங்கிரஸ் இயக்கம் ஏழைகள் — பாட்டாளிகள் ஆகியோருக்குக் கேடு செய்யும் இயக்கம்.
2. காங்கிரஸ் இயக்கந்தான் தென்னாட்டை வட நாட்டு முதலாளிகளுக்கு அடமானம் வைத்திருக்கிறது.
3. காங்கிரஸ் இயக்கந்தான் ஜாதிகளையும் மதங்களையும் கிளறிவிட்டுக் கொண்டிருக்கிறது.
4. காங்கிரஸ் இயக்கந்தான் தென்னாட்டுக் கலாச்சாரத்தை அழித்து வருகிறது.

இதைவிடத் தெளிவாக என்றால் கூறமுடியாது தம்பி, இது தெளிவளிக்காவிட்டால், தெளிவு பெறக்கூடாது என்று தீர்மானித்துக்கொண்டு, திட்டமிட்டுக் காரியம் நடக்கிறது என்பதுதானே பொருள்.

தம்பி! ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதலமைச்சராக இருந்த நாட்களில், உனக்கு நினைவிருக்கும் என்று எண்ணுகிறேன், மறதி உள்ளவர்களுக்கு நினைவூட்டு. அவர், கதர்ச் சட்டைப் பெரியார், கருப்புச் சட்டை நண்பர், என்றெல்லாம் பெயரெடுத்தார்.

> அச்சம் தயை தாட்சணியமற்ற நிர்வாகி.
>
> பார்ப்பன மேலிட மிரட்டலுக்குப் பணியாத விவேகி.
>
> வடநாட்டு-மத்ய சர்க்காரிடம் வாதிடத் துணிந்த அஞ்சா நெஞ்சர்.

என்றெல்லாம், போற்றிப்;புகழப்பட்டவர்.

தர்மமும், நேர்மையும் அதேபோது நெஞ்சு உரமும் அவர் ஆட்சியில் கொலுவிருந்தன என்று நாமே பேசியிருக்கிறோம்.

அவருடைய பழைமை உணர்ச்சி, பக்தி, ஆகியவை கூட, பசப்பு அல்ல, சுயநல நோக்கமுடையதல்ல என்று பாராட்டினோம்.

அந்த நாட்களிலே, வடநாட்டுப் பத்திரிகைகள், சென்னையை ஆட்சி புரிவது, பெரியார் கட்சிதான்— ஓமந்தூரார் அதற்கு ஒரு திரை-கருவி-என்று எழுதின

அப்போது 'நாம்' ஒன்றாக இருந்த காலம்.

எனக்கு, இந்தி எதிர்ப்பு நடத்தும் 'சர்வாதிகாரி' பட்டம் கிடைத்த நேரம்.

'சிட்ரன்' கார் சவாரியும், மீரான் சாயபுத் தெரு மாளிகையில் ஒரு அறையும், விருந்துபசாரமும், சினிமா செல்வதற்குக்கூடப் பணமும் பெரியார் மூலம் அன்புடன் தரப்பட்டு வந்த காலம்.

'பழம் பெருமையை எண்ணி ஏங்க அல்ல, இதைக் கூறுவது, அந்த நாட்களில், அப்படிப்பட்ட ஓமந்தூரார் என்று நாம் பாராட்டியபோதிலும், அவர் நல்லவர், ஆகையால் அவருக்காக, வௌவால் புழுக்கை துர்நாற்றத்தைச் சகித்துக்கொள்ள வேண்டுமா என்று கேட்டோம் என்பதை எடுத்துரைக்கத்தான்.

இன உணர்ச்சி இருக்கலாம்—இருக்கிறது ஓமந்தூராரிடம், என்றாலும், காங்கிரசில் அல்லவா இருக்கிறார்!—என்று நாட்டு மக்களைப் பார்த்துக் கேட்டோம் —இஃதல்லவா கொள்கை உரம் என்று நேர்மையாளர்கள் பாராட்டினர்.

அண்ணா! இது சரி, ஆனால் ஓமந்தூரார், 'வைதீகப் பிடுங்கல்' நமது 'சுயமரியாதை'க் கிளர்ச்சிகளுக்கு வைரியாக இருந்தவர், காமராஜர் அப்படி அல்ல; நாம் இவருடைய ஆட்சியில், எத்தனை புரட்சிகரமான சுயமரியாதைக் கிளர்ச்சியும் செய்யலாம். இடம் தருகிறார்" என்று வாதாட எண்ணுவாய் தம்பி! இதுவும் சரியான வாதமல்ல—ஏனெனில்,

> காமராஜரும் இப்போது கோயில் கோயிலாகச் செல்கிறார்.
>
> கோயில் கோயிலாகச் சென்றுகொண்டிருந்த ஓமந்தூரார் மடாதிபதிகளின் ஆதிக்கத்துக்கே உலை வைக்க அஞ்சா நெஞ்சுடன் அன்று கிளம்பினார்.
>
> எத்தனை பெரிய சுயமரியாதைக் கிளர்ச்சிக்கும் இடம் தருபவர் இந்தக் காமராஜர் மட்டுமல்ல; ஆச்சாரியார் காலம், பிள்ளையார் உடைத்த நேரம்.

எனவே, இந்த சர்ட்டிபிகேட், தந்து, காமராஜருக்கு ஆதரவு திரட்டுவதிலும் அர்த்தமில்லை.

மற்றோர் உண்மையையும், அறிந்து வைத்துக் கொள் தம்பி, குமாரசாமி ராஜா முதலமைச்சராக இருந்த

நாட்களில், (13—10—51) பத்திரிகை நிருபர்கள் அவரை அணுகி,

"'திராவிட கழகத்தார் கோயில்கள் முன்பு கூட்டம் போட்டுக் கடவுள்களை பரிகசிக்கிறார்களாமே இதைத் தடுக்க முடியாதா?''

என்று கேட்டனர். அதற்கு குமாரசாமி ராஜா, என்ன சொன்னார்?

எந்தப் பத்திரிக்கை நிருபராவது காமராஜரிடம் இந்தக் கேள்வி கேட்டால்.

''போங்க, போங்க, வேறே வேலையே கிடையாதா உங்களுக்கு? உங்க கோயிலும், உங்களோட சாமிகளும் மகா லட்சணந்தான்! திட்டினா என்ன தீயா பிடிச்சுவிடும்.''

என்று கேட்டு, கேள்வி கேட்டவர்களைத் திக்கு முக்காடச் செய்து விடுவார், என்று பதில் கூறுவதற்குத் துடிப்பவர்கள் என் மனக்கண் முன் தெரிகிறார்கள்.

குமாரசாமிராஜா, இன உணர்ச்சி ததும்பும் உள்ளத்தினர், நம்மவர்—அவர் நமது ஆதரவினைப் பெற்றுத் தீரவேண்டியவர்—என்று நாம் கூறினதுகூட இல்லை; எனினும், தம்பி, நிருபர்களிடம் அவர் என்ன பதிலளித்தார்?

"'திராவிட கழகத்தினர் கடவுள்களைத் திட்டுவதுபற்றி யாதொரு நடவடிக்கையும் சர்க்கார் எடுக்க முடியாது. கோயிலுக்குச் செல்லும் தனிப்பட்டோரை பரிகசித்தாலே நடவடிக்கை எடுக்க முடியும்.''

இப்படித்தான் சொன்னாரே தவிர, ''பக்தர்காள்! அஞ்சற்க! நாம் இந்தப் பாவிகளை அழித்தொழித்து விடுகிறோம்'' என்று கூறவில்லை.

இதற்கு முன்பு நமக்கு முதல் அமைச்சராக வாய்த்திருந்தவர்களெல்லாம், வைதீகப் படைத் தளபதிகளாக இருந்து, சுயமரியாதை இயக்க நடவடிக்கைகளை நொறுக்கித் தள்ளியது போலவும், காமராஜர் மட்டும் தான், வைதீகர்களுக்கு இடமளிக்காமல், சுயமரியாதைக் கிளர்ச்சிகளுக்குப் பாதுகாப்பாகத் தமது ஆட்சி அதிகாரத்தைத் துணைதருவது போலவும், வாதிடுவது அவரிடம் பிறந்துவிட்ட வாஞ்சனையைக் காட்டுகிறதே தவிர, வேறொன்றுமில்லை.

குமாரசாமி ராஜா, இன்னும் தெளிவாகவே கூறினார்.

"'மதச் சார்பற்ற சர்க்காரில் மதத்தைக் கண்டித்துப் பேசுவதைத் தடுக்க முடியாது. கோவிலுக்கு முன் ஒரு கட்சிக்குக் கூட்டம் போட இடமளிக்கையில் மற்றொரு கட்சிக்கு மட்டும், மறுக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் பொதுக் கூட்டம் போடக் காங்கிரஸ் கட்சிக்கு அனுமதி அளித்த பிறகு, அதே இடத்தில் கூட்டம் போடத் திராவிட கழகத்துக்கோ, இதர கட்சிக்கோ அனுமதி மறுக்க முடியாது.''

இதைவிட, தம்பி, காமராஜர் போக்கிலே என்ன புதுமை, புரட்சி, நேசம், பாசம், காண்கிறோம்!!

குமாரசாமிராஜா, ஓமந்தூரார் ஆகியோர் நல்லவர்கள்—நேர்மையாக நடந்து கொண்டவர்கள் என்பது கண்டோம்—எனினும், அப்போது,

''தென்னாட்டான் தன் நாட்டுக்குச் செய்யவேண்டிய முதல் தொண்டு காங்கிரசை ஒழிப்பதுதான்!''

என்று அழுத்தந் திருத்தமாக விடுதலை, எழுதக் கண்டு, தம்பி, நீயும் நானும், தோள் தட்டிக்கொண்டு கிளம்பினோம், காங்கிரசை எதிர்க்க, கவனமிருக்கிறதல்லவா!!

ஏனெனில், நமக்கு 'விடுதலை' எடுத்துக் காட்டிற்று, அவருக்கு இன உணர்ச்சி இருக்கலாம், இவர் நேர்மையாளராக இருக்கலாம், ஆனால், அதற்காக நாம் மயங்கிவிட முடியாது, வௌவால் புழுக்கை துர்நாற்றத்தைச் சகித்துக்கொள்ள முடியாது என்று அறிவூட்டியது.

காங்கிரஸ் கட்சி பிர்லாகட்சி, டாட்டாகட்சி, முத்தய்ய செட்டியார் கட்சி—வடபாதி மங்கலம் கட்சி.

காங்கிரஸ் கட்சி பிராமணப் பாதுகாப்புக்கட்சி—வடநாட்டுச் சுரண்டலை ஆதரிக்கிற கங்காணிக் கட்சி.

காங்கிரஸ்கட்சி அடக்குமுறை ஒன்றையே நம்பி வாழ்கின்ற பண நாயகக் கட்சி.

என்று அன்று 'விடுதலை' எழுதிய நிலையில்தான் இன்றும் காங்கிரஸ் இருக்கிறது.

அந்தக் காங்கிரஸ் வெற்றி பெற்று, முதலமைச்சராக வேண்டும் என்று, ''வௌவால் புழுக்கையின் துர்நாற்றத்தை எப்படிச் சகித்துக் கொள்வது'' என்று கேட்ட 'விடுதலை' இன்று வாதாடுகிறது.

'பேரகராதி'யைப் பார்க்கிறேன் — திடுக்கிட்டுப் போகிறேன்.

தம்பி! என்னைப்பற்றி, இழித்து எழுதுவது கண்டு நீ வருத்தப்பட்டு, எனக்கு ஆறுதல் கூறுகிறாய். எனக்கு நிச்சயமாக, என்னைப்பற்றி எழுதப்படுகின்ற இழிமொழி பற்றி எரிச்சல் கிளம்புவதில்லை எனக்கு இருக்கிற ஒரே திகைப்பு, வௌவால் புழுக்கையின் துர்நாற்றம் சகிக்க முடியவில்லை என்றல்லவா, பேரகராதி எழுதிற்று...... இப்போது.........என்று எண்ணித்தான், திடுக்கிட்டுப் போகிறேன். உனக்கு எப்படி இருக்கிறதோ? ஊரார் என்ன எண்ணுகிறார்களோ!

அண்ணாதுரை

(26—8—56 திராவிட நாடு இதழில்)

கோபம்

கோபத்திற்குச் சிறந்த மருந்து, தாமதித்தலே.

—ஸெனீகா.

அமைதியாயிரு, நீ எவரையும் வயப்படுத்திக் கொள்ள முடியும்! —ஸெயின்ட் ஜஸ்ட்.

கோபம், வெறிகொண்ட குதிரையைப்போல் துள்ளிப் பாய்கையில் இடையில் தடுக்கி விழும்.

—ஸாவேஜ்.

வெளியே காட்டிய கோபம் மன்னிப்புக்கு வழி தேடும்; உள்ளே அடக்கிய கோபம் பழிக்கு வழிதேடும்.

—புல்வெர்.

ஆசிரியர்களே ஒன்றுபடுங்கள்!

"உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!" எனக்குரல் கொடுத்தான் உலகப்பெருஞ் சித்தாந்தங்களில் ஒன்றைப் பெற்றெடுத்த கார்ல் மார்க்ஸ். தொழிலாளர்கள் திரண்டனர். தங்கள் நலம் கண்டனர்; காண்கின்றனர். ஒற்றுமை தொழிலாளர் உலகத்தில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியிருப்பதனைக் காண்கிறோம்.

எதற்கும் எங்கும் ஒற்றுமை வேண்டுமென்று பேசப்பட்டு வருகிறது! ஒற்றுமைபற்றி ஒவ்வொரு நாளும் வருங்காலப் பரம்பரையினர்க்கு எடுத்துரைக்கும் ஆசிரிய இனம் இன்றைக்குப் பரிதாபகரமாகச் சிதறிக் கிடக்கின்றது.

ஆசிரியர்களை ஒன்றுதிரட்ட முயலும் ஒரு சிலருடைய முயற்சியும் 'பாதி கிணறு தாண்டும்' பணியாக முடிந்து விட்டிருக்கிறது.

தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் என்றும் உயர்தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் என்றும், உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் என்றும் கல்லூரி ஆசிரியர்கள் என்றும் பல வகையினராய் ஆசிரியர்கள் பிளவுபட்டிருக்கின்றனர். இன்னும் தனியார் துறைப்பள்ளி ஆசிரியர்கள் என்றும், அரசினர் பள்ளி ஆசிரியர் என்றும் கற்பிக்கும் பாடங்களுக்கேற்ப கணித ஆசிரியர், விஞ்ஞான ஆசிரியர், தமிழாசிரியர், தலைமையாசிரியர் என்றும் எண்ணற்ற வகையினராய் தங்களைத் தாங்களே வேறுபடுத்திக்கொண்டு, ஒருவருக்கொருவர் ஒட்டாமல் ஒருவரை மற்றவர் காணும்போது அவரை இவர் தீண்டத்தகாதவரையோ திருநந்தனரையோ பூரியார் பார்ப்பதுபோலப் பார்த்துக் கொள்கின்ற நிலைமை.

இவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கென ஒரு சங்கம் அமைக்கும் அளவுக்கு வெற்றி கண்டிருக்கின்றனர். தலைமை ஆசிரியர்கள் என்றால் தலைமை ஆசிரியர்கள் கழகம், தமிழாசிரியர்கள் என்றால் தமிழாசிரியர்கள் கழகம் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் என்றால் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் சங்கம் என்றிவ்வாறு தங்கள் தங்கள் பிரிவுக்கென ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு மகிழ்ந்தமைந்து விட்டனர்! தங்கள் குறைகளை அரசிடம் தெரிவிப்பர். அரசு விருப்பப்பட்டுச் செய்தால் உண்டு. இல்லாவிட்டால் இல்லை. அந்த அளவுக்கு இச்சங்கங்களுக்கு ஏகப்பட்ட மதிப்பு! ஏராளமான செல்வாக்கு!

பாவம், தங்கள் தொழிலுக்கு உரிய பாதுகாப்பை—மற்ற மற்ற தொழில் செய்வோருக்கு இருக்கும் பாதுகாப்பைக் கூடத் தேடிக்கொள்ள இயலாதவர்களாய் இருக்கிறார்கள்.

இன்றைக்கு ஆசிரியர்களிலே பெரும்பாலோர்க்குத் தொழில் பாதுகாப்பு இல்லை. ஒரு பீடித் தொழிலாளிக்கு இருக்கும் வேலைப் பாதுகாப்பு வருங்காலத் தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்கும் பணியிலே ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கு இல்லை என்பதைக் கேட்க எவரும் வருந்துவர்; கவலை கொள்வர். ஆனால் இன்றைக்கு உண்மைநிலை அதுதான்.

தமிழகத்தைப் பொறுத்தவரை "தமிழகக் கல்வி விதிகள் (Madras Educational Rules) இருக்கின்றன. இவை வெள்ளைக்காரன் நம்மை ஆண்ட காலத்தில் எழுந்தவை போலும்! இவைகள் ஆசிரியர்களைப் பாதுகாக்கும் — அவர்கள் பார்க்கும் வேலைக்குப் பாதுகாப்பளிக்கும் சட்டப்பூர்வமான விதிகள் (Statutery Rules) அல்லவென்று சட்ட வல்லுநர்கள் சொல்கிறார்கள்!

"இன்றைக் கிருப்பாரை நாளைக் கிருப்பார் என்று எண்ணவோ திடமில்லையே" என்பார்களே அந்தப் பரிதாபகரமான நிலை இன்றைக்கு ஆசிரியர்களுக்குத்தான் மிக நன்றாய்ப் பொருந்தும்.

இந்த நிலையில் கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டிய—மாணவர்களிடையே நல்லொழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் விதைத்து வருங்காலத்தில் ஒரு பொன்னான தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பொறுப்பு, கடமை சரிவர முழுமன ஊக்கத்தோடு ஆசிரியர்களால் நிறைவேற்றி வைக்கப்படும் என்று எவ்வாறு எதிர்பார்ப்பது?

இருந்தாலும் தமிழ்ப் பண்பும் பொறுமையும் திறமையும் வறுமையும் மிகுந்த நம்முடைய ஆசிரியர்கள் பெருமளவுக்குத் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அந்த மகத்தான பணியை நிறைவேற்றிக் கொண்டுதான் வருகின்றார்கள்; வருவார்கள்—அதில் நமக்கு ஐயமேதுமில்லை.

ஆனால் அவர்களை மனக்குறையோடு பணியாற்றச் சொல்வதிலே நிறைந்த ஆபத்து இருக்கிறது. இதனை எண்ணிப் பார்க்க வேண்டியவர்கள் உரிய காலத்தில் எண்ணிப் பார்த்து செய்யவேண்டியவைகளைச் செய்தாக வேண்டும். ஆசிரியர்களுக்கு எண்ணற்ற குறைகள். அவைகளிலே முதன்மை வாய்ந்தது அவர்களுக்குச் சட்டப்படிக்கான வேலைப் பாதுகாப்பு இல்லை என்பது. ஆசிரியர்கள் ஒன்றுபட்டுத் தங்கள் குரலை எடுப்பாக ஒலிப்பதன் மூலம் தீர்த்துக்கொள்ளவேண்டிய பலகுறைகளில் தலையாய குறை இது என்பதனை, அரசாள்வோர், வருங்காலத்தில் நல்ல கல்வி வளம்பெற்ற உயர்வான தமிழகத்தைப் படைக்க விரும்பும் நல்லோர் எல்லோரும் கவனித்துத் தீர்க்கவேண்டிய குறை என்பதனை இதனை முதலிலே எடுத்துக்காட்டினோம்.

இந்நிலையில் தலைமையாசிரியர்கள் தங்கள் நலனைப் பேணவென்று ஒரு கழகமும், தமிழாசிரியர்கள் தங்கள் நலனை மட்டும் காத்துக் கொள்ளவென ஒரு கழகமும்; தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் தங்களுக்கென ஒரு கழகமும் வைத்துக்கொண்டு தனித் தனியே உழன்று வருவது 'நான்கு எருதுகள்' கதை போல ஆசிரியர்களின் வலிவைக் குறைப்பதாக முடியும்.

காலஞ்சென்ற நமது மதிப்புக்கும் அன்புக்கும் உரிய அறிஞர் அண்ணா அவர்களிடம் நகர ஈட்டுப்படி போன்ற குறை நயந்து வர தனித் தனியே மேலே சொன்ன குழுவினர் சென்ற போது, பேரறிஞர் அவர்கள் சொன்னார்கள்:

"என்னிடம் இருப்பது ஒரே பதில்தான். அதை நீங்கள் எல்லோரும் சேர்ந்து வந்திருந்தால் ஒருதடவையிலேயே சொல்லியிருப்பேன்; தனித்தனியே வருவதால் நேரம்தான் வீணாகிறது"—என்றார்கள். இதில் ஆசிரியர்கள் எந்த நிலையினராயினும் எந்தத் தரத்தினராயினும் எந்த வகையினராயினும் ஒன்றுபட்டு ஒரே அமைப்பின்கீழ் செயல்பட வேண்டும் என்பதற்கான குறிப்பு அடங்கிக் கிடக்கின்றது.

எனவே பற்பல நிலையினராய் சிதறிக் கிடக்கும் ஆசிரியர்களை ஒன்று திரட்டும் முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்று தொடர்புடைய நல்லோரை வேண்டுவதோடு, ஆசிரியர்களையும் வேண்டுகிறோம்; ஆசிரியர்களே ஒன்றுபடுங்கள்!

தமிழ் வாழுமட்டும்!

சாந்தம் பொறுமை சத்தியம் என்னும்
ஆன்றவிந் தடங்கிய கொள்கை யோடும்
தெள்ளத் தெளிந்த தீந்தமிழ் அமுதை
அள்ளித் தெளிக்கும் அழகிய பேச்சும்
கற்பனை நயமும் கட்டுரை வரையும்
அற்புத ஆற்றலும் ஒருங்கே அமைந்து
அறிஞர் என்னும் பட்டமும் பெற்று
வறிஞர் எல்லாம் வாழும் வகையில்
உரிமைப் போர்கள் பலவும் நடத்தி
பார்புகழ் செந்தமிழ் நாட்டின் தகைசால்
தனிப்பெரும் தலைவன் ஆகி மக்கள்
திவ்விய மனதில் நீங்கா திருக்கும்
தென்னகக் காந்தி இவனெனக் கூறும்
எதையுந் தாங்கும் இதயம் படைத்த
எங்கள் தலைவா! எங்கே மறைந்தாய்?
பொங்கும் கண்ணீர் போமிட மெதுவோ!
தாய்தமிழ் வாழுங் காலம்
தூயநின் பேரும் வாழிய! வாழியே!

—சு. பொன்னையா

தமிழ்நாடு உலகாள வேண்டும்!

எந்தமிழ்க்குப் பகையாவான் இருக்கின்றானோ?—அடே?
இன்றவனும் உயிர் சுமந்தே திரிகின்றானோ?—இதை
எந்தமிழர் கேட்டுமனம் பொறுக்கின்றாரா?—பகை
வென்றெழுந்தே அடிமைத்தளை அறுக்கின்றாரா?
மன்றுள்நடம் புரிதமிழை மறுக்கின்றாரா?—உயிர்
மாய்ந்தொழியத் தலைகொடுக்க வெறுக்கின்றாரா?
கொன்றுதமிழ் இளைஞர்தமை யழிக்கின்றாரா?—கொடுங்
குட்டைமனப் பித்தர் நமைப் பழிக்கின்றாரா?

மன்றெழுந்த தமிழுணர்வைத் தடுக்கின்றானோ?—உயர்
மதிகெட்டு மனங்கெட்டுத் தடிக்கின்றானோ?
வென்றெழுந்த தமிழழிக்கத் துடிக்கின்றானோ?—உயிர்
விரைந்தொழிய விலைகேட்டு வெடிக்கின்றானோ?
இன்றெழுந்த தமிழார்வம் பழிக்கின்றானோ?—புலை
இழிகட்சிக் குழி விழுந்து விழிக்கின்றானோ?
சென்றழுந்திக் கழிச் சேற்றில் திளைக்கின்றானோ?—வெறிக்
கிறுக்கெழுந்து குலைக்கமதி சிதைக்கின்றானோ?

செத்தாலுந் தமிழ் மண்ணில் சாக வேண்டும்! நாம்
செழித்தாலுந் தமிழ் நாட்டில் செழிக்க வேண்டும்!
செத்தாலும் தமிழோங்கச் செய்தல் வேண்டும்! எச்
செயலாலும் தமிழாக்கம் சிறத்தல் வேண்டும்!
ஒத்தாளும் பெருமாட்சி பெற்றால் போதும்!—கடல்
உலகாளத் தமிழ்நாடு முனைந்தே வாழும்!
முத்தாக மணியாக மூண்டாள் நம் தாய்!—உயிர்
முதலாகக் கொளவேண்டும் முறையே யாண்டும்!

—புலவர் தி. நா. அறிவுஒளி

முன்னேற்றப் பாதை

சிறுதுளியே பெருவெள்ளம் ஆகக் கூடும்
சிற்றுளியால் பெருமலையை உடைக்க லாமே
பெருவாழ்விற் கடிப்படையே சிறுசே மிப்பே
பேருண்மை யாமிதனைக் கடைப்பி டித்தால்
வறுமையெனும் கொடும்பிணியைத் துரத்த லாமே
வாழ்வினிலே வளம்பலவும் சேர்க்க லாம்நாம்
இறுதிக்கா லத்தினிலே இன்ப மாக
இருந்திடலாம்; இதுவன்றோ நமது தேவை!

அரசாங்கத் திட்டத்தில் ஆர்வங் காட்டி
ஆனபல முதலீடு செய்திட் டாலோ
வருகின்ற நன்மை நம் வீட்டுக் கன்றி
வண்ணத்தமிழ் நாட்டிற்கும் உரிய தாகும்
புரிட்சிகரத் திட்டமிதை மனதில் நன்கு
புரியவைத்துக் கொள்வோமே நாமும் நன்றே
சரியான பாதையெனத் தெரிந்த பின்னும்
தயங்குவதோ? புறப்படுகசெல்வோம் வெல்வோம்

எதிர்காலம் என்பதனை மனதில் எண்ணி
இறந்திட்ட காலமதை ஒப்பு நோக்கி
எதுசெய்ய வேண்டுமென நிகழ்கா லத்தில்
ஏற்றபடி திட்டங்கள் தீட்டி நல்ல
புதுச்சக்தி யோடு நாம் செயல்பட் டாலே
புவியின்பம் யாவும் நம் சொந்த மாகும்
இதுவரையில் இருந்தநிலை போதும் இன்றே
இணையில்லா முன்னேற்றப் பாதை காண்போம்!

—ப. கதிரவன்

தொடுவானே நீ....!

தொடுவதற் கெளிதே போன்று
தோற்றத்தா லாசை காட்டித்
தொடர்ந்திட முயன்றால் மேலும்
தொலைவினில் மெள்ள நீங்கி
விடுவிடு வெனச்செல் கின்றாய்
விந்தைசெய் தொடுவா னுன்றன்
குடையினை விரித்துக் கொஞ்சம்
குளிர்நிழல் தாரா யோ, நீ?

பம்பரக் கொண்டை போன்று
பார்வைக்குத் தோன்றும் வானின்
விம்மிய விளிம்பே! யேழை
விரிதுயர் வாழ்வி னூடே
நம்புதல் காட்டி மாறும்
நாடகம் போல வானாய்!
கும்பிடும் எளிய னுக்குக்
கொடுத்திடா வரந்தா னோ. நீ!!

வேனிலின் தீக்க ரங்கள்
வெடிப்பென நிலத்திலூர,
மானினந் தவித்து நெல்லி
மரத்தடிச் சோர்ந்து வீழ;
கானலே நீராய்த் தோன்றிக்
கண்பொத்தியாடி விட்டு
வானிலே யேறி நின்றோ
வஞ்சகத் தொடுவா னானாய்?!

சூனியச் சுவற்றின் மீது
சுமத்திய வானக் கூரைக்
கூனலே நீயென் றானால்
கோப்பையோ விந்த வையம்?
வானமும் பூமிப் பந்தும்
வழக்கின்றி யேற்ற எல்லைத்
தானமாய் நின்றாய் போலுந்
தந்திரத் தொடுவா னே, நீ!!

—கு. க, பிறைகுடிப்பித்தன்

உ ரி மை

—சதயன்—

அந்த வார 'மனோரஞ்சிதம்' இதழில் அந்தச் சிறு கதையினைப் படித்து முடித்த ஜெயகுமாரியின் மனம் மீண்டும் மீண்டும் அந்தச் சிறு கதையின் முடிவைச் சுற்றியே சுழன்று கொண்டிருந்தது. அந்தச் சிறு கதையையும் தனது வாழ்க்கையினையும் ஒப்பிட்டுப் பார்த்தாள். அந்த நினைவால் ஏற்பட்ட ஆற்றாமையின் பெருமூச்சு அவளிடமிருந்து வெளிப்பட்டது.

அக்கதை, அவளின் தற்போதைய வாழ்க்கையைப் பிரதிபலிப்பது போலிருந்தது. அக்கதையின் நாயகி—ஓர் சாதாரண பெண்! ஜெயகுமாரி—ஓர் நடிகை! அவ்வளவுதான் வேறுபாடு.

அவளது தலைக்கு மேலே சுழன்று கொண்டிருந்த மின் விசிறியினால் கூட ஆற்றமுடியாத அளவுக்கு சூடேறிப் போயிருந்தது அவளது மூளை, தனது சிந்தனையால். இருப்பினும் அது மேலும் சிந்திக்க சளைக்கவில்லை. 'கதையின் நாயகி தனது நல்வாழ்விற்காக செய்த சோதனை மாதிரியே நானும் ஓர் சோதனை செய்யட்டுமா? அதில் நான் வெற்றி பெறுவேனா? இழந்த என் வாழ்வு திரும்புமா? செய்துதான் பார்த்தால் என்ன? தலையா போய்விடப் போகிறது? இப்போதிருப்பதைவிட என்ன குடிமுழுகி விடப்போகிறது?'

சிந்தனை, ஓர் முடிவுக்கு வந்த பின்னர் செயல்பட ஆரம்பித்தது. ஆம்! ஜெயகுமாரி துணிந்து விட்டாள்.

எழுந்து சென்று தொலைபேசியை எடுத்தவள், டைரெக்டர் தனசேகருடன் தொடர்பு கொண்டாள். அவர் வீட்டிலிருப்பதை உறுதிப்படுத்திக்கொண்ட அவள், இன்னும் சற்று நேரத்தில் அவரது வீட்டிற்கு வருவதாகவும், தயவு செய்து காத்திருக்குமாறும் கேட்டுக்கொண்டாள்.

சிறிது நேரத்தில் அவளது கார், தனசேகரின் வீட்டை நோக்கிப் பறந்தது.

தனசேகரன் அவளை வரவேற்று உபசரித்தார். அந்த உபசரிப்பில் ஓர் 'மதிப்பு' இழையோடியது.

நலன் விசாரணைகள் முடிந்த பின்னர் தனசேகரன், மற்ற சினிமா உலகப் பிரமுகர்கள் அவளிடம் அனுதாபப்பட்டுக் கூறும் வார்த்தைகளையே மற்றுமொருமுறை கூறினார். உன்னை நினைத்தால் தான் வருத்தமாக இருக்கிறது ஜெயகுமாரி. சினிமா உலகில் இதெல்லாம் சகஜம் தான் என்றாலும், உன் கணவர் உதயகுமார் இப்படியெல்லாம் மாறுவார் என்று நாங்கள் யாருமே எதிர் பார்க்கவில்லை. என்ன செய்வது, எல்லாம் நம் கையிலா இருக்கிறது?'

அவரது வார்த்தைகள், அவளது இதயத்தை மேலும் புண்படுத்தினாலும் வந்த காரியம் கை கூட வேண்டுமே! மேலும், சினிமா உலகின் வயதில் மூத்த பெரிய டைரக்டர்களுள் ஒருவரான இவர், மதிப்பைக் கொடுத்து வாங்கும் கண்ணியமுள்ளவராயிற்றே! என்ற எண்ணம் அவளது ஆத்திரத்தைத் தடுத்தது.

"நடந்ததைப் பற்றி கவலைப்பட்டு என்னசார் ஆகப்போகிறது? இனி நடப்பவையாவது நல்லதாக இருக்கட்டுமே! அதற்காகத்தானே உங்கள் உதவியை நாடி வந்திருக்கிறேன்......"

"என்ன...என்ன...என்ன...! என் உதவியை நாடி வந்திருக்கிறாயா? விபரமாகச் சொல்லம்மா..." என்று கூறியவாறு, சோபாவில் சாய்ந்து கொண்டிருந்த தனசேகரன், நிமிர்ந்து உட்கார்ந்து அவளை நோக்கினர்.

"ஆமாம், சார்......நான் மீண்டும் திரையுலகில் நுழையலாம் என எண்ணுகிறேன்..." என்று கூறிய ஜெயகுமாரி, சங்கடப்பட்டு தன் தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

நேரம் நகர்ந்ததே தவிர, டைரக்டரிடமிருந்து பதிலேதும் வராததால் தலை நிமிர்ந்து தனசேகரனைப் பார்த்தாள் ஜெயகுமாரி.

அவர், அவளையே கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தார்.

அவரது அந்த தீட்சண்யமான பார்வையை அவளால் தாங்கிக் கொள்ள முடியாததால் மீண்டும் அவள் தலை குனிந்தாள்.

"ஜெயா..."—அவரது குரல் கரகரத்தது, தழுதழுத்தது. அந்த அழைப்பில் ஒரு தந்தையின் பாசம் ஒலித்தது.

குற்றம் புரிந்த குழந்தையைப் போலத் தலை நிமிர்ந்து அவரை நோக்கினாள் ஜெயகுமாரி. அவளது கண்கள் கலங்கியிருந்தன.

"ஜெயா! உன்னை முதன் முதலில் திரையுலகில் அறிமுகப்படுத்தியவனே நான்தான். எனது படம் ஒன்றில் நீயும் உதயகுமாரும் சேர்ந்து நடித்துக் கொண்டிருந்தபோது தான் உதயகுமார் உன்னை நேசித்துத் திருமணம் செய்து கொண்டார். குடும்பப் பெண்ணாகிவிட்ட நீ, அதன் பின்னர் இந்தச் சாக்கடை சினிமா உலகில் காலெடுத்து வைக்கவில்லை. அப்பொழுது நான் எவ்வளவு பெருமைப்பட்டேன் தெரியுமா? மீண்டும் ஏனம்மா, இந்தச் சாக்கடையில் கால் வைக்கிறாய்? தற்போது நீ வாழும் தனிமை வாழ்க்கை உனக்குப் பிடிக்காததால் பொழுது போக்குக்காக நடிக்கிறேன் என்று நீ காரணம் கூறினாலும், அது எனக்குப் பிடிக்கவில்லை. ஜெயா, உதயகுமார் என்னதான் உனக்குத் துரோகம் செய்துவிட்டு, தற்போது எவளோ ஒரு 'எக்ஸ்ட்ரா' நடிகையுடன் வாழ்ந்து கொண்டிருந்தாலும் அவர் மனம் மாறி, ஒரு நாள் உன்னைத் தேடி வருவாரம்மா. கோவலன் மாதவியுடன் வாழ்ந்தாலும், கடைசியில் கண்ணகியைத் தேடித்தான் வந்தான், நீ கண்ணகி ஜெயா, கண்ணகி! தயவு செய்து உனது எண்ணத்தை மாற்றிக்கொள். சாக்கடைப் புழுவாக மாற எண்ணாதே யம்மா"

"சா...ர்...! நான் சாக்கடைப் புழுவாக மாற விரும்பவில்லை. டைரக்டர் சார்! இழந்த என் வாழ்வைத் திரும்பப் பெறவே விரும்புகிறேன். நான் தொடர்ந்து நடிக்க விரும்பவில்லை, ஒரேயொரு படத்தில்தான் நடிக்க விரும்புகிறேன். அந்த ஒரு படம் எனது விருப்பப்படி அமைந்தால், இழந்த என் வாழ்வை மீட்டுவிடுவேன், டைரக்டர் சார்...அதற்காகத்தான் உங்களை நாடினேன். உதவுவீர்கள் என்ற நம்பிக்கையோடு. நீங்களோ, முழுதும் கேளாமல் முதலிலேயே அறிவுரை கூற ஆரம்பித்துவிட்டீர்கள்..."

அவலமாக ஒலித்த அவளது குர

தழுத்த குரலும், ஆருகப் பெருகிய கண்ணீரும் தனசேகரையும் சற்றே வருந்தச் செய்துவிட்டது. முழுதும் கேட்காமல் இந்தப் பெண்ணின் மனதை வருத்தமடையச் செய்து விட்டோமே! என்று வருந்தினர்.

"சொல்லம்மா...முழுதும் சொல். உனது வளர்ச்சியில் பங்கு கொண்ட நான், உனது நல்வாழ்விலும் பங்கு கொள்கிறேன். நீ வாழ, நான் எதையும் செய்கிறேனம்மா..."

அவரது ஆதரவைப் பெற்றுவிட்ட மகிழ்ச்சியில் தனது திட்டத்தை—சோதனையைக் கூறினள், ஜெய குமாரி.

"திட்டம், உனது நோக்கில் நல்ல திட்டம்தான் ஜெயா. ஆனல் இந்தத் திட்டமே உன்னை உதய குமார் தவருகப் புரிந்து கொள்ள ஏதுவாக மாறினல்...அதனல் உங்களிடையே ஏற்பட்டிருக்கும் இந்தத் தற்காலிகப் பிரிவு, நிரந்தரப் பிரிவாக மாறுமானல்......நீ எண்ணுவதற்கு எதிரிடையாக செயல்பட்டுவிடுமே, ஜெயா......"

"இல்லே, சார். எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது, இந்தத் திட்டத்தில்; அவரைத் திருத்தி, இழந்த வாழ்வை மீட்பேன் என்பதில். எந்தக் கணவனும் தனது உரிமையை விட்டுக்கொடுக்கமாட்டான் சார்... இதற்கு அவர் மட்டும் விதிவிலக்கா என்ன? நீங்கள் மட்டும் உதவினல்......"

"சரி, ஜெயா. உனது விருப்பப் படியே நடக்கட்டும். நீ நன்ருக வாழ்ந்தால் எனக்கொரு திருப்தி, நாம் நட்ட மரம் செழிப்புடன் இருக்கிறதே என்று."

"நன்றி சார், ரொம்ப நன்றி! நான் எனது தந்தையைப் பார்த்ததில்லே. உங்களை, இதோ, பார்க்கிறேன்"—மீண்டும் அவள் கண்கள் கண்ணீரை உகுத்தன.

அடுத்த ஐந்தாம் நாளே திரையுலகம் திமிலோகப்பட்டுக் கொண்டிருந்தது, ஜெயகுமாரியின் சினிமா உலகப் பிரவேசச் செய்தி கேட்டு. சில நடிகைகளுக்கு வயிற்றில் புளி கரைத்தது. பல டைரக்டர்களும் தயாரிப்பாளர்களும் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஆரும் நாளே பத்திரிகைகளில் முழுபக்க விளம்பரங்கள் வெளி வந்தன, "விரைவில் வெளி வருகின்றது! திரையுலகத் தாரகை ஜெயகுமாரியும், கலையுலகக் கதிரவன் கனகராஜு"ம் நடிக்கும் 'காதல் கசக்குமா? முழுநீளப் பொழுது போக்கு காதல் கலர்ச் சித்திரம். டைரக்டர்: தனசேகரன்" என்று.

இரண்டு மாதங்களில் படம் வெளி வந்தது. கண்கவர் நடனங்களும், காதல் காட்சிகளும் கலரில் வந்தால் காணக் கசக்கவா செய்யும் ரசிகர்களுக்கு? எங்கும் 'காதல் கசக்குமா?' படத்தைப் பற்றியே பேச்சு; அதில் வரும் ஜெயகுமாரி—கனகராஜ் காதல் காட்சிகள் பற்றிய வருணனை; காதல் டூயட்டுகளில் சில வரிகளை அடிக்கோடிட்டு விவாதித்த சில ரசிகர்கள், ஜெயகுமாரியின் அந்தரங்க வாழ்க்கையை விமர்சனம் செய்து, விரைவில் ஜெயகுமாரி கனகராஜைத் திருமணம் செய்துகொள்வார் என்ற வதந்தியையும் பரப்பிவிட்டனர். உண்மையிலேயே, ரசிகர்களின் அந்த முடிவுக்குத் தக்கபடியேதான் படத்தில் ஜெயகுமாரி—கனகராஜ் காதல் காட்சிகள் இடம் பெற்றிருந்தன.

விரைவிலேயே, 'காதல் கசக்குமா?' நூருவது நாள் விழாவைச் சந்தித்தது.

* * *

'காதல் கசக்குமா?' நூருவது நாள் விழாவில் கலந்து கொண்டு, பாராட்டுரைகளும் பரிசுகளும் பெற்றுக் கொண்டு வீட்டிற்குத் திரும்பிய ஜெயகுமாரி, வீட்டின் முன் ஹாலில் காலடி வைத்ததுமே திடுக்கிட்டு விட்டாள். காரணம்—

ஹாலில் ஒரு மூலையில் போடப்பட்டிருந்த சோபா ஒன்றில், கால் மேல் கால் போட்டுக் கொண்டு, வெளி வாயிலேயே நோக்கியபடி உட்கார்ந்திருந்தான், உதயகுமார்.

தனது கணவனைப் பார்த்ததும் கையிலுள்ள பரிசுகளையெல்லாம் வீசியெறிந்துவிட்டு, 'அத்தான்!' என்று அழைத்து, அவன் கால்களில் விழுந்துக் கதறலாமா என்று தோன்றியது ஜெயகுமாரிக்கு. உடனே தன்னுடைய ஆற்ருமையை அடக்கிக் கொண்டாள் அவள். அழுது புரண்டால், அவளது திட்டமே திசைமாறியல்லவா போய்விடும்?

ஏறிட்டு, உதயகுமாரின் விழிகளை ஓர் விநாடி அலட்சிய பாவனையுடன் சந்தித்த அவள், நேராகத் தனது தனியறைக்குள் சென்றுவிட்டாள்.

"ஜெயா!"—சிம்மம் கர்ஜித்தது; ஆனல், அங்கே உதயகுமார்தான் நின்றுகொண்டிருந்தான்.

அலங்கார மேஜை முன் உட்கார்ந்து கொண்டிருந்த ஜெயகுமாரி திரும்பி அவனைப்பார்த்தாள், அலட்சியத்துடன்,

"என்ன?"

"நமக்குத் திருமணம் ஆனதும் சினிமாவில் நடிக்க மறுத்துவிட்ட நீ......"

"ஆமாம்; நடித்தேன்......படம், 'காதல் கசக்குமா?! படத்தில் நான் கனகராஜு"டன் நடித்த காதல் காட்சிகள் இயற்கையாகவே இருக்கின்றனவாம்; நாங்கள் தொட்டு நடிக்காவிட்டாலும் பிரமாதமாக இருக்கிறதாம் — சொன்னர்கள். நீங்கள் படம் பார்த்தீர்களா?"—இகழ்ச்சியுடன், கேலி கலந்த குரலில் வெளிவந்தன, அவளின் சொற்கள்.

"பார்த்தேன் ஜெயா, படத்தைப் ...பார்த்தேன்..."—அவனது கண்கள் சிவந்தன. அடுத்த கணம், ஜெயகுமாரியின் கன்னங்கள் தறிபடும் பாட்டைப் பட்டன; கவி பாடின.

அறைந்து அறைந்து ஓய்ந்து விட்டன, உதயகுமாரின் கைகள். அங்கேயிருந்த நாற்காலியொன்றில் 'தொப்'பென்று அமர்ந்தான்.

ஜெயகுமாரியின் கன்னங்கள் கன்றிப் போயிருந்தன. ஆனலும், கண்ணீர் விடவில்லை அவள்.

(14-ம் பக்கம் பார்க்க)

விற்பனையாளர் தேவை!

"காஞ்சி" இதழை விற்பனை செய்ய, கீழ்க்கண்ட ஊர்களுக்கு விற்பனையாளர்கள் தேவை. முன் பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

1. ஆற்காடு
2. திருவண்ணுமலை
3. வேலூர்
4. வள்ளியூர்
5. தேவக்கோட்டை

விவரங்களுக்கு:

உரிமையாளர்,
'காஞ்சி.'
காஞ்சிபுரம்-2

அதேதான் நினைவுச் சின்னம்...

—செய்யாறு செல்வம், எம்.ஏ.—

"மக்கள் தலைவன் என்பவன் அறிவுச் செல்வத்தை மேலும் மேலும் வளர்க்கிறான்; சிந்தனை எனும் அடிவானத்தை மேலும் விரிவு படுத்துகிறான்; மனித சமூகத்தை 'அச்சம்' எனும் சிறைச் சாலையிலிருந்து விடுவிக்கிறான்...

ஒரு மாபெரும் தலைவன் என்பவன் மக்களின் கைதட்டுதலையோ அல்லது பதவியையோ தேடி அலைபவனல்ல; ஆனால் அவன் உண்மையைத் தேடி அலைகிறான்; மனித சமூதாயம் மகிழ்ச்சியாக வாழ பாதை அமைக்கிறான்."

ஓர் உண்மையான மக்கள் தலைவனைப்பற்றி இங்கர்சால் செப்பிய இலக்கணத்தை மேலே கண்டோம். அமெரிக்க நாட்டு இங்கர்சால் வகுத்த இலக்கணத்திற்குத் 'தென்னாட்டு இங்கர்சால்' என்று நாம் வாழ்வெல்லாம் போற்றிப் புகழ்ந்த அறிஞர் அண்ணா அவர்கள் எவ்வளவு தகுதியும பொருத்தமும் உள்ளவராக விளங்குகிறார் என்று எண்ணும்போது நம் இதயம் பூரிப்பால் வழமுகிறது.

அண்ணா தன் வாழ்நாளின் இறுதி நாட்களில் அடையாறு மருத்துவமனையில் தன் நினைவிழந்து படுத்திருந்ததைக் கண்ட ஒரு தமிழ்ப் பெரியார் "வேட்டையாடிக் களைதத சிங்கம்போல்படுத்திருந்தார்" என்றார் ஆம்! அண்ணா தன் வாழ் நாள் முழுவதும் ஒரு வேட்டையாடிய சிங்கம் தான்!! தமிழகத்தில் அவர் பழமையை எதிர்தது வேட்டையாடினார்! மதத்தின் கொடுமைகளையும், மூடப் பழக்க வழக்கங்களையும் எதிர்த்துப் போராடினார்! பிறப்பால் உயர்ந்தவன். தாழ்ந்தவன் என்ற பேதங்களை எதிர்தது வேட்டையாடினார். நம் தாய்மொழியாம் தமிழ்மொழி, பிற மொழி ஆதிக்கத்தால் அழிக்கப்படுவதை எதிர்த்துப் போராடினார். முதலாளித்துவத்தின் கொடுமைகளை எதிர்த்துப் போராடினார்.

இங்கர்சால் குறிப்பிட்டதைப் போல், அண்ணா அவர்கள் தன் அறிவாலும் ஆற்றலாலும் மக்களை 'அச்சம்' என்ற சிறையிலிருந்து விடுவித்து கோழைகளாய் மோழைகளாய் வாழ்ந்த தமிழ்ச் சமுதாயத்தை வீரர்களாய் வேங்கைகளாய் ஆக்கி அவர்கள் ஒளிமிக்க வாழ்க்கை வாழ பாடுபட்டவர். அண்ணா என்று பொதுவாழ்வில் காலடி எடுத்து வைத்தாரோ, அன்றிலிருந்து அவர் மறைந்தது வரை, தன் பேச்சாலும் எழுத்தாலும் தமிழ் மக்களுக்கு ஆற்றிய பணிகள், வருங்கால சந்ததியினர் நன்றி உணர்வோடு நினைவு கூரத்தக்கவை.

அண்ணா பொதுவாழ்வில் புகுந்த நேரம் தமிழர் அரசியலில் ஆங்கிலேயருக்கு அடிமைகளாய், சமுதாயதில் மூடப் பழக்க வழக்கங்களுக்கு அடிமைகளாய், பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களாய் நலிந்து கிடந்தனர். ஒரு காலத்தில் உலக நாகரீகங்கள் நடுவில், குன்றின் மேலிட்ட விளக்கேபோல் சுடர்விட்டெரிந்த தமிழர் நாகரிகம், காலப் புயலால் ஒளியிழந்து வலிவிழந்து, தன் பண்டைப் பொலிவிழந்து உலக நாடுகள் மத்தியில் வைர மணிகளுக்கு நடுவே கூழாங் கல்லைப்போல் ஆகவிடடது,

காலாழ் களரில் சிக்கிய களிற்றைப்போல் தமிழர் சமுதாயம் கீழே சாதிக்கொடுமை, மேலே அரசியல் அடிமைத்தனம், இவ்விரண்டுக்குமிடையே விழிகள் பிதுங்க, பெருமூச்சு வாங்க வேதனைபட்டுக் கடந்தது. அந்த நேரததில்தான் அண்ணா "ஏ! தாழ்ந்த தமிழகமே! தநநிலை மறந்த தமிழகமே! தன் மானமற்ற தமிழ்நாடே! ஏ சோர்வுற்ற தமிழ் நாடே! வீறுகொண்டெழு" என்று தூங்கக்கிடந்த தமிழர் சமுதாயத்தைத் தன் ஈடு இணையற்ற சொல்வன்மையால் தட்டி எழுப்பினார். விழி, எழு, நட, உன் பண்டைப் பெருமையை அடை என்பதே அவரின் இலட்சிய முழக்கமா இருந்தது.

அவர் அரசியல் மேடையில் பெரியாரைச் சந்தித்து அவரின் சீடரானது முதல் இறுதியாகச் சென்னையில் கலைவாணரின் சிலையைத் திறந்து வைத்தது வரை அவர் ஆயிரம் ஆயிரம மேடைகளிலே முழங்கயிருக்கிறார், பட்டி தொட்டிகளிலே முழங்கயிருக்கிறார், பட்டினங்களிலே முழங்கயிருக்கிறார், கல்லூரி மாணவர்மததயில் முழங்கியிருக்கிறார், கல்லாத உழவர் நடுவில் பேசயிருக்கிறார். சட்ட மன்றங்களில் முழங்கியிருக்கிறார், அவர் பேச்சும் மூச்சும் தமிழரின் வாழ்வை வளமிக்க வாழ்வாக ஆக்குவதையே இலட்சியமாகக் கொண்டது. அண்ணா கேட்டாரைப் பிணித்து கேளாரும் வேட்ப மொழியும் சொல்வன்மையால் மட்டும் தொண்டாற்றவில்லை. தன்னிகரில்லாத எழுத்துவன்மையாலும் சீரிய தொண்டாற்றினார். 'திராவிட நாடு' இதழில் அவர் தீட்டிய எழுத்தோவியங்கள் இளைஞரின் உள்ளங்களைத் தட்டி எழுப்பி அவர்களை நடமாடும் எஃகுக் கம்பிகளாக ஆக்கின. அண்ணா கண்ட மறுமலர்ச்சி பேச்சு மேடையோடும்; எழுத்துலகத்துடனும் நின்றுவிடவில்லை, நாடகத் துறையையும் அவர் தன் கைவண்ணத்தால் மறுமலர்ச்சி பெறச் செய்தார். அண்ணா நாடகத் துறையில் புகுவதற்கு முன்னால், தமிழ் நாட்டில் நாடகம் நள்ளிரவுச் சத்தமாகத் தான் இருந்தது. நாடகம் வாழ்வைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்கவில்லை. நாடக மேடையில் 'பக்த பிரகலாதனையும்' 'அரிச்சந்திராவையும்'தான் நாம் கண்டோம். ஆனால் அண்ணாவின் பேனா நாடக மேடையில் 'சநதிரோதயம்', 'நல்ல தம்பி', 'ஓர் இரவு', 'வேலைக்காரி' போன்ற சமூக சீர்திருத்த நாடகங்களை நமக்குத் தந்தது. அண்ணா தனது சீர்திருத்த நாடகங்கள் மூலம் ஓர் அறிவுப் புரட்சியைத் தமிழ் நாட்டில் தோற்றுவித்தார். எனவேதான் அவர் மாற்றாராலும் 'தென்னாட்டுப் பெர்னாட்ஷா' என்று போற்றப்பட்டார்.

சமூக வீதியில் நாம் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் மனிதர்களைக் 'கதா பாத்திரங்களாக' வடித்தார், அவரின் நாடகங்களில் ஏழை உழவனின் கண்ணீர், மிராசுதாரின் ஆணவம், பண்டார சந்நிதியின் பகல் வேடம், மேனா மினுக்கிகளின் சொகுசு வாழவு, இத்தனையையும் நாம் கண்டோம்.

கலையை அண்ணா உல்லாசபுரியினரின் பொழுதுபோக்குச் சாதனமாக நினைக்கவில்லை. கலைத் துறையை அண்ணா பாமர மக்களின் மனதிலே சிந்தனைப் புரட்சியைத் தோற்றுவிக்கும் வலிமை மிக்க கருவியாகக் கையாண்டார். சிந்தனைப் புரட்சி செயல் புரட்சிக்கு

வித்து அல்லவா? உலகில் நிகழ்ந்த ஒவ்வொரு புரட்சியும் முதலில் மக்களின் மனதில் சிந்தனை என்கிற அரும்பாக இருந்ததுதானே! ஆகவேதான் அண்ணா முதலில் மக்களின் சிந்தனையில், தன் பேச்சாலும் எழுத்தாலும் நாடகத்தாலும் ஓர் அறிவுப் புரட்சியை ஏற்படுத்தினார்.

அண்ணாவே ஓர் இடத்தில் கூறுகிறார்: "சாக்ரடீஸ், வால்டேர் லெனின் ஆகிய மூவரது புரட்சியின் கூட்டுறவு நம் இயக்கம். கூர்முனைப் பேனா கொண்டு அரண்மனைகளை, அஞ்ஞானிகளின் இருப்பிடங்களை பழைமையின் கோட்டைகளைத் தாக்கிய வீரன் வால்டேர் வெற்றி பெற்ற பின்னர்தான் புரட்சித் தேவன் லெனின் போராடி வெற்றிபெற முடிந்தது. சமுதாயத் துறையில் வால்டேர் ஒரு புரட்சியை உண்டாக்கிய பின்னர்தான் மக்கள் லெனினை வரவேற்றார்கள்.

முதலிலே சாக்ரடீஸ், பின்னர் வால்டேர், அதற்குப் பின் லெனின் இந்த மூன்று சம்பவங்களும் வெவ்வேறு காலத்தில் நடைபெற்றன. இவ்வளவும் சமுதாயப் புரட்சிக்காகவே நடைபெற்றது... ஆனால் நம் நாட்டில் இம்மூன்றையும் நம் இயக்கம் ஒருங்கே நடத்த வேண்டியிருக்கிறது. இதனால்தான் நம் புரட்சி மூன்று புரட்சிகளின் ஒரு கூட்டாயிற்று."

முதன் முதலிலே மக்களுக்கு அறிவுப் புரட்சியை உண்டாக்கிய பின்னர்தான் மதம், கலை, கலாசாரம் ஆகியவற்றிலே அவர்களைத் திருத்த முடியும்."

அண்ணாவே கோடிட்டுக் காட்டிய இந்த அறிவுப் புரட்சியைத்தான், அண்ணா கடந்த 30 ஆண்டுகளாக பேச்சு மேடையின் மூலம், பத்திரிகையின்மூலம், நாடகமேடையின் மூலம் ஈடு இணை அற்ற முறையில் ஆற்றிவந்தார்கள். அந்த அறிவுப் புரட்சியின் அறுவடையைத்தான் நாம் 67 பொதுத் தேர்தலில் கண்டோம். கையிலே காசு இல்லாமல் மனதிலே மாசு இல்லாமல் 1949-ல் ஓர் அரசியல் கட்சியைத் தொடங்கி 1967-ல் அதை ஆளும் கட்சியாக மாற்றி அமைத்தார். 1957-ல் 15 பேர்களுடன் சட்டமன்றத்தில் நுழைந்து, 1962-ல் 50 ஆகப் பெருகி அதுவே 1967-ல் 138 ஆக உயர்ந்து ஆளுங் கட்சியாகவும் மாறிற்று. அண்ணா செய்து காட்டிய இந்த அதிசயம் உலக வரலாற்றிலேயே கிடையாது!

இதை, ஓர் அமைதியான புரட்சி என்று வரலாற்றாசிரியர்கள் வர்ணிப்பார்கள். 'விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்'—என்றாரே வள்ளுவப் பெருந்தகை அதற்கு இலக்கணமாய் அமைந்துவிட்டது அறிஞர் பெருந்தகையின் சாதனை. தமிழ் கூறும் ஞாலம் அறிஞர் அண்ணா காட்டிய வழியில் சென்று, எதேச்சாதிகாரத்தை வீழ்த்தி ஜனநாயகத்தை அரியணையில் அமர்த்தியது.

சொல்லின் செல்வராகவும், எழுத்தின் வேந்தராகவும், நாடகாசிரியராகவும், அரசியல் வாதியாகவும் இதுவரை இருந்த அண்ணா, தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் சிறந்த நிர்வாகியாகவும் மாறினார். அண்ணா ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஒரு சில நாட்களில் தமிழ் நாட்டை எதிர்நோக்கியுள்ள முக்கிய அரசியல் பிரச்சினையை அவரே தனக்கே உரிய நடையில் விவரிக்கிறார்:

"ஏழைகளின் உள்ளங்களிலும் வீடுகளிலும் மகிழ்ச்சி ஒளியை ஏற்றி வைக்க நான் இருளில் தேடித்தேடி தீப்பெட்டியை எடுக்க மாடத்தில் கைவிட்டால் அங்கு என் கையை வண்டுகள் கடிக்கின்றன; அதையும் பொருட்படுத்தாமல் தீப்பெட்டியைத் தேடி எடுத்து விளக்கை ஏற்றப்போனால் திரி கருகிக் கிடக்கிறது. விளக்கை ஆட்டிப் பார்த்தால் மண் எண்ணை இல்லை என்பது தெரிகிறது. விளக்குக்குத் தேவையான மண் எண்ணை டெல்லியிடம் இருக்கிறது."

மத்திய–மாநில அதிகாரப் பங்கீடு திருத்தி அமைக்கப் படவேண்டும் என்று அண்ணா அன்றே எழுப்பிய குரலைத்தான் இன்று வங்கம் எழுப்புகிறது. கேரளம் எழுப்புகிறது. தமிழரசுக் கழகத் தலைவர் அதற்காக ஒரு போராட்டமே நடத்தப் போவதாக முழங்குகிறார். இந்தியக் கூட்டாட்சியின் எதிர்காலம் ஒளி மிக்கதாக இருக்கவேண்டும் என்று விரும்பும் அனைவரும் எழுப்புகின்றனர்.

அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்ற குறுகிய காலத்தில் சாதித்த சாதனைகள் பல. அமைச்சர்களின் ஆடம்பரக் கார்களையும், அதிகச் சம்பளத்தையும் ஒழித்தார். ஏழைகளுக்குப் படி அரிசி அளந்தார். போக்குவரத்து பஸ்களை படிப்படியாக நாட்டுடைமையாக்கும் சமதர்மத் திட்டத்தை அமுல் படுத்தினார் இருமொழித்திட்டம்கொண்டு வந்து இந்தியை ஒழித்தார். அரசு அலுவலகங்களில் தமிழ் தனக்குரிய இடத்தைப் பெறச்செய்தார், உலகத் தமிழ் மாநாடு கூட்டி தமிழின் தொன்மையையும், வன்மையையும், அவனி அறியச் செய்தார். சுயமரியாதைத் திருமணங்களைச் சட்டபூர்வமாக செல்லுபடி ஆக்கினார். கலப்புத்திருமணங்களை ஊக்குவிக்க, தங்கப் பதக்கம் வழங்கினார். சீரழிந்துவிட்ட நாட்டை சீர்படுத்த சீரணி கண்டார்.

அண்ணா நிறைவேற்ற எண்ணியிருந்த திட்டங்கள் எண்ணில் அடங்கா. அவர் கோடிட்டுக் காட்டிய வழியில் சென்று, அவற்றை நிறைவேற்றுவதே அவரின் தம்பியராகிய நமது கடமை. அவர் பெற்றிருந்த 'எதையும் தாங்கும் இதயத்தை' நாமும் பெற்று, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவ்வரிய பண்புகளுடன் நாம் எதிர்காலத்தைச் சந்திப்போமாக.

ஆனந்த விகடன் தனது தலையங்கத்தில் தீட்டியதை மீண்டும்நினைவு கூர்கிறேன், "அண்ணா இனிமேல் இல்லை. ஆனால் அவர் 'தம்பி'க்கு எழுதிய எழுத்தும், தமிழ் இளைஞர்களுக்காகப் பேசிய பேச்சுக்களும் காலமெலாம் நிற்கும்.

தமிழ் இளைஞர்கள் அவற்றை மேலெழுந்தவாரியாகப் படித்துவிடாமல் அவருடைய ஆழ்ந்த கருத்துக்களைப் புரிந்துகொண்டு தமிழ் நாட்டினைப் பற்றி அந்தப் பெருமகன் கண்ட கனவுகளை நனவாக்க முயலவேண்டும். இதுவே அண்ணாவுக்குச்செலுத்தும் அஞ்சலியாகும்."

இதயம்!

ஒவ்வோர் இதயமும் ஓர் உலகம்' நீ வெளியே பார்க்கிற அனைத்தையும் உன்னுள்ளேயும் காண்கிறாய். உன்னை நீ தெரிந்துகொள்ள, உன்னை இதுவரை நேசித்தவர்களையும் தூற்றியவர்களையும் உண்மையான முறையில் குறித்துப் பார்.

—லாவேட்

8-ம் பக்கத் தொடர்ச்சி

உலகத்தின் பெரும்பான்மையான பகுதிகளில் அவர் சுற்றுப் பயணம் மேற் கொண்டிருக்கிருர். அங்கேயெல்லாம் குடியரசுத் தலைவருக்கு நல்ல நண்பர்கள் பலர் இருக்கிருர்கள். அத்தகையோருக்கு இந்த சேதி ஒரு இடியேயாகும்.

காந்தியடிகளோடு, அலி சகோதரர்களுடன் இவரும் ஐக்யப்பட்டு, அவர் தம் பெரும்படையில் தன்னையும் ஒரு சேவகனுய் ஆக்கிக் கொண்டு சேவை ஒன்றின் மூலமே முழுமையான இன்பம் பெறமுடியும் என்பதற்கு இலக்கியமாய்த் திகழ்ந்த குடியரசுத் தலைவரை இனி நாம் காணமுடியாது.

சிலபேர் மறைந்துபோய் விட்டாலும், அவர் தம் மறைவை உணரக்கூட முடியாத அளவுக்கு அத்தகையோர்தம் புகழ் வாழ்வு அமைந்து விட்டிருக்கும். அவ்வகையில் டாக்டர் ஜகீர் உசேன் அவர்களது மறைவை, அவர் மறைந்து விட்டார் என்ற நிலையிலிருந்து அகற்றி, வாழ்ந்துகொண்டு தானிருக்கிருர் என்ற தன்மையினை உண்டாக்கக் கூடிய அளவுக்கு அவர்தந்த அறிவுரைகளும், வாழ்ந்து காட்டிய எளிய பண்பாட்டுமுறைமைகளும், பொதுத் தொண்டும் நமக்கு எதிரே என்றென்றும் நிழலாடிக்கொண்டுதானிருக்கும்.

குடியரசுத் தலைவர் பதவியிலிருந்தோரில், பதவியிலிருந்துகொண்டே மறைவெய்திய முதல்வர் இவர். இவரது இழப்பு பொதுவாக நாட்டுக்கே பேரிழப்பு. குடும்பத்தாரின் துக்கம் எழுதி மாளாதவை. அவர்களோடு நாமும் நம்மை ஈடுபடுத்திக் கொள்வதைத் தவிர, இப்போதைக்கு வேறென்ன செய்ய முடியும்?

★

(11-ம் பக்கம் பார்க்க)

ஊசி விழுந்தால் கூட சத்தம் கேட்கும் அமைதி, அப்பொழுது அவ்வறையில் நிலவியிருந்தது.

“தயவுசெய்து நான் கேட்கும் இரண்டு கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள். என்னை ஏன் இப்பொழுது அறைந்தீர்கள்? என்னை அடிக்க உங்களுக்கு என்ன உரிமையிருக்கிறது?” — அமைதியைக் கிழித்துக்கொண்டு, சன்னமாக ஒலித்தது, அவளது குரல்.

“ஒன்றும் தெரியாமல் தான் என்னைக் கேட்கிருயா கேள்வி? சொல்கிறேன். குடும்பப் பெண்ணுன நீ— எனது மனைவியான நீ, படத்தில் அம்மாதிரி நடித்ததற்காக உன்னை அடித்தேன். உன்னை அடிப்பதற்கு நான் உரிமை கொண்டவன்—நான் உன் கணவன்! தெரிந்து கொண்டாயா?”

அவன் சொல்வதைக் கேட்கக் கேட்க மகிழ்ச்சியால் துள்ளியது அவள் இதயம். ஆனுலும்......

“தெரிந்து கொண்டேன், அத்தான். ஆனுல், புரியவில்லை! மாற்ருன் ஒருவனுடன் அம்மாதிரி நடித்ததற்கே நீங்கள் என்னை அடிக்கிறீர்கள். நீங்கள் எனது கணவர்— ஒப்புக்கொள்கிறேன். என்னைப் பிரிந்து, எவளோ ஒருத்தியுடன் வாழ்க்கையே வாழ்கிறீர்களே! நான் உங்கள் மனைவி! நான் உங்களை என்ன செய்ய?”

“ஜெயா...!”—அவளின் கேள்வியில் உள்ள நியாயத்தை உணர்ந்து கொண்டான் அவன். இருப்பினும் தனது தோல்வியை ஆண் மகனுன அவன் எப்படி அவளிடம் ஒப்புக் கொள்வான்? அந்தத் தோல்வியுணர்ச்சி, கோபக் குரலாக வெளிப்பட்டது.

“கட்டிக் கொண்டவளுடன் வாழ்க்கை நடத்துபவன்தான் அத்தான் கணவன்! கண்டவளுடன் வாழ்க்கை நடத்துபவன், காமுகன் தான்! இப்பொழுது நீங்கள் என்னைத் தொட்டு அடித்தீர்களே, இந்த உணர்ச்சியைத் தான் உங்களிடமிருந்து எதிர்பார்த்தேன். இப்பொழுது சொன்னீர்களே, கணவன் எனும் உரிமை என்று, அந்தச் சொல்லைத்தான் உங்களிடமிருந்து எதிர்பார்த்தேன்.

“நீங்கள் எனது கணவர் என்ருல் நான் உங்களது மனைவியல்லவா? உங்களை எவளோ ஒருத்தியுடன் வாழக் கொடுத்துவிட்டு நான் மட்டும் எப்படி வாழ்வேன்? கணவன் என்ற உரிமையைப் போலத் தான் மனைவி எனும் உரிமையும். மனைவி எனும் அந்த உரிமையை எந்தப் பெண்ணும் இழக்க விரும்ப மாட்டாள், அத்தான். கணவன் எனும் உரிமை வாழ்க்கையை நீங்கள் வாழ வேண்டும் என்பதற்காகத் தான் டைரக்டர் தனசேகரின் உதவியுடன் அம்மாதிரி படத்தில் நடித்தேன். அதற்காக என்னை மன்னித்து விடுங்கள், அத்தான்!” — விம்மித் தணிந்தது, அவள் நெஞ்சம். துளிர்க்க ஆரம்பித்தது கண்ணீர், அவள் கண்களில். அவளது சிரம், அவனது கால்களில் பணிந்தது.

தவறை உணர்ந்தான், உதயகுமார். ‘தன் மனைவி’யைத் தூக்கி நிறுத்தினுன். “நீதான் என்னை மன்னிக்கவேண்டும், ஜெயா”

“நானு உங்களை மன்னிப்பது? அழகுதான் போங்கள்!”

“ஆமாம் நீ அழகுதான்!”

அவளது முகம், அவனது நெஞ்சகத்தில் பதிந்தது. அவனது நெஞ்சம், மஞ்சமானது.

★

முகப்பில்:

மறைந்த
இந்திய ஜனாதிபதி
ஜகீர் உசேன்
அவர்கள்

வினா-விடை

1. அரசியலில் மனச்சாட்சிக்கு இடமுண்டா?

அப்படி இடமிருக்க முடியுமானால், பல பேர் இன்று அரசியலில் சுடருமிழும் நட்சத்திரங்களாக இருக்க முடியாது.

2. கேரள அரசு நிலைக்குமா?

நிலைக்கவேண்டும் என்பதே நம் விருப்பம். ஆனால் அமைச்சர்களுக்குள்ளேயே 'அரோகரா' போடத் தொடங்கி இருப்பதுதான் வருத்தத்தைத் தருகிறது. மேலும் விவரம் கேட்காதீர்கள். விமர்சித்துவிட்டால் 'ஜனசக்தி'க்குக் கோபம் வந்துவிடும்!

3 தி. மு. கழகம் பணம் கொடுத்து வோட்டுக்கள் பெறுவதாகக் காங்கிரஸ் கூறுகிறதே! பொருள் என்ன?

காங்கிரஸ் கட்சி முன்பு ஆளும் கட்சியாக இருந்தது. அரசுக்குச் சொந்தமான பணத்தை யெல்லாம் அது, அந்த வழியில் செலவிட்டுப் பழக்கம் இருக்கும்போல் தெரிகிறது. தான் திருடி அடுத்தவளை நம்பமாட்டாள் அல்லவா! அந்த நினைவுதான் காங்கிரசுக்கு! கழகம் ஒரு பத்து லட்சம் ரூபாய் நிதி திரட்ட எவ்வளவு பாடுபடவேண்டியிருக்கிறது! அந்த அருமை கலைஞருக்கல்லவா தெரியும்! காங்கிரசுக்குத் தெரியுமா?

4. மொரார்ஜிதேசாய் சொத்துக்களுக்குக் கணக்குக் காட்டி இருக்கிறார் என்பது சரியா?

சரியல்ல. அவர் சொத்துக்களுக்குக் கணக்கு வேண்டும் என்று புபேஷ்குப்தாதான் கேட்டிருக்கிறார். இன்னும் சில மத்திய அமைச்சர்கள்கூட வரி ஏய்ப்போர் பட்டியலில் இடம் பற்றி இருக்கிறார்களாம்! அவர்கள் யார்? அவர்களது சொத்து விவரம் யாது? என்றுகூட கேட்டிருக்கிறார் அவர். பதில் கிடைக்குமா என்பதுதான் சந்தேகம்.

5. நாவலர் அறை கூவலுக்கு சுப்பிரமணியம் பதில் தருவாரா?

சுப்பிரமணியமே ஒரு அறை கூவல் அரசியல் வாதியாயிற்றே! பதிலையெல்லாம் அவரிடம் எதிர்பார்க்கலாமா? வாதத்துக்கு வர அவர் என்ன பைத்தியக்காரரா? அல்லது காங்கிரசைப் பற்றி எதுவுமே அறியாதவரா?

6. நிஜலிங்கப்பா, இனி எந்தப் பதவியும் வகிக்கப்போவதில்லை என்று அறிவித்திருப்பது எதைப் பிரதிபலிக்கிறது?

தன் போன்றவர்களால், வருங்கால அரசியலை ஜீரணிக்க முடியாது என்ற உணர்வைப் பிரதிபலிக்கிறதோ என்னவோ!

7. மேரீனா கடற்கரையை அண்ணா கடற்கரை என்று மாற்றி விடக்கூடாதா?

அரிய யோசனைதான்! அரசாங்கத்துக்கு முறையோடு தெரிவியுங்கள்.

8. டாக்டர் ஜகீர்உசேன் தென்னாட்டைச் சேர்ந்தவரா?

ஆமாம். ஆந்திரத்திலுள்ள ஐதராபாத்தைச் சேர்ந்தவர்.

9. பெருந்தலைவர்கள் காலமாகி விடுகிறபோது கடையடைப்புக்கள் நடத்தவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தப்படுவது சரியா?

இதுபோன்ற சந்தர்ப்பங்களில் முக்கியத்துவமானவை என்று செய்தி இதழ்கள் நடத்தப்பட அனுமதிக்கப்படுகின்றன. இதுபோல் ஓட்டல்கள், அழுகும் பொருள் விற்பனைகள் முதலியனவும்கூட அனுமதிக்கப்பட வேண்டும். ஆனால் நிர்ப்பந்தங்கள் சரியா? என்பதை காங்கிரஸ்காரர்களிடம்தான் கேட்க வேண்டும்; அனுதாப உணர்ச்சியை நிர்ப்பந்தித்துப் பெறமுடியாது.

10. இன்னமும் எல்லைப் பகுதிகளில் மோதல்களும் ஊடுருவல்களும் அடிக்கடி ஏற்படுவதாகச் செய்திகள் வருகின்றனவே? அது எப்படி?

எல்லைப் பகுதிகளில் போடப்பட்டிருக்கும் பலத்தக் காவல் அப்படி!

11. ஜனாதிபதியாக காமராசர் வரமுடியுமா? வாய்ப்புண்டா?

இந்திய ஜனநாயக மரபுப்படி காமராஜ் மட்டுமல்ல, சாதாரண ஒரு குடிமகன்கூட ஜனாதிபதியாக வரமுடியும். வாய்ப்பு என்றால் வாய்க்கப்படுவது என்று பொருள். அந்தப்பொருளில் பார்த்தால் காமராசருக்கு 'வாய்ப்பு'க் கிடைக்கும் என்று சொல்வதற்கில்லை.

12. தமிழகத்தில் தண்ணீர்க் கட்டுப்பாடு வருமா?

வரக்கூடாது என்பதே தமிழர் தம் வேட்கை!

13. இலங்கையில் தமிழ்–தமிழர் வெறுப்புணர்ச்சி மிகுந்துவருவது ஏன்?

'சிங்கள வெறி' அப்படி ஆக்கிக் கொண்டிருப்பதனால்தான்!

14. அடுத்த பொதுச்செயலாளர் யாராக இருக்கக்கூடும்? என்று கோடி காட்டுவீர்களா?

அப்படிக் கோடி காட்டும் அளவுக்கு இன்னும் யாரும் கொடி காட்டவில்லையே!

15. 'கலைவிருந்து' என்றால் என்ன?

'கலை' என்றால் புரிகிறது; விருந்து என்றால் புரியவில்லையே!

16. சமூகக்கட்டுப்பாடு என்பதற்கு விளக்கம் தருவீர்களா?

இது என்னால் முடியுமோ! ஏதோ ஓர் காங்கிரஸ் மாநாட்டில் யாரோ ஓர் காங்கிரசுத் தலைவர் எதைப்பற்றியோ பேசும்போது இந்த வார்த்தையைப் பயன்படுத்திவிட்டார். 'சோஷியல் கண்ட்ரோல்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ் விளக்கம்தான் சமூகக்கட்டுப்பாடு என்பது. சிறப்பாக இது பேங்கிகளின் மேல் போட்டுப் பயன்படுத்தப் படுகிறது. பாங்குகள் வெறும் தொழில் நிறுவனங்களாக மட்டுமல்லாமல், சமுதாயத்துக்கு உதவுகிற நல்ல திட்டங்களின் மீது முதலீடு செய்ய — அல்லது உதவக்கூடிய வகையில் அவற்றைக் கட்டுப்படுத்துவதுதான் பொருள் என்று நான் நினைக்கிறேன். காங்கிரசார் என்ன நினைக்கிறார்களோ!

★

Kamala Sugar Mills Ltd.,

(GLUCOSE FACTORY)

Amaravathi Nagar (P. O.)
Udumalpet S. Rly.,

Coimbatore Dt.

★

Liquid Glucose "Grade-A"

Now we have started production of our New Glucose "Grade-A" This Glucose is purified by "Demineraliser" which gives good colour and avoids stickness.

So it will be a great advantage to the consumers of glucose liquid for the manufacture of confectionary Sweets, Biscuits, Syrups Aerated waters and Pharmaceuticals.

Our Distributors for Madras, South Arcot
North Arcot and Chingleput Districts:

P. Singaravelu,
310, Wall Tax Road, Madras-3

OUR SALES BRANCHES AT:

MADURAI: 28-B, ELUKADAL AGRAHARAM.
TRICHY: 9, CHINNAKKADAI STREET.
KUMBAKONAM: 84, J. P. KOIL EAST STREET.

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
... அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.